உ

சிவமயம்.

குமரன்.

கற்றதனு லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின். (திருவள்ளுவர்.)

சதங்கை க. | காரைக்குடி துந்துபிஞு மாசிமீ கரு உ | மணி கo.

வணக்கம்.

முருகக்கடவுள்.

அந்திப்போ தழகுறவே நடித்தருளும்
வழித்துணைவ ரருளுங் கோவை
வந்திப்போர் நினைத்தபடி மயிலேறி
அயிலெடுத்து வருஞ்செவ் வேளைச்
சந்திப்போம் மலர்சொரிவோம் புகழ்ந்திடுவோம்
அவன்கமலத் தாளுந் தோளுஞ்
சிந்திப்போ மாதலினு னமதுபழ
வினைகளெல்லாஞ் சிந்திப் போமே.

—சைவ எல்லப்ப நாவலர்.

தக்ஷிணுமூர்த்தி.

மும்மலம் வேறுபட் டொழிப மொய்த்துயிர்
அம்மலர்த் தாணிழ லடங்கு முண்மையைக்
கைம்மலர்க் காட்சியிற் கதுவ நல்கிய
செம்மலே யலதுளஞ் சிந்தி யாதரோ.

—கச்சியப்ப முனிவரர்.

கலைமகள்.

பழுதகன்ற நால்வகைச்சொன் மலரெடுத்துப்
பத்திபடப் பரப்பித் திக்கு
முழுதகன்று மணந்துசுவை யொழுகியணி
பெறமுக்கண் மூர்த்தி தாளில்
தொழுதகன்ற வன்பெனுகார் தொடுத்தலங்கல்
சூட்டவரிச் சுரும்பூர் தேனுங்
கொழுதகன்ற வெண்டோட்டு முண்டகத்தாள்
அடிமுடிமேற் கொண்டு வாழ்வாம்.

—பரஞ்சோதி முனிவர்.

திருக்கோயில்களின் திருவிழாக்கள்.

(ஸ்ரீமான், ச. சச்சிதானந்தம் பிள்ளையவர்கள். B. A. L. T. எழுதியது.)

நமது நாட்டுப் பெரியகோயில்களில் நடக்கும் பிரமோத்ஸவ விவரங்கள் அவ்வப்போது விளம்பரப் பத்திரிகைகள் மூலமாக வெளியாகின்றன. சிலநாட்களாக அப்பத்திரிகைகள் பலவற்றில் "விசேஷமான வேடிக்கை!" "பதின்மூன்று தாசிகள் நடனம் பண்ணுவார்கள்!!" "பரதநாட்டியத்தோடு சுவாமி கோயிலுக்கு எழுந்தருளுவார்!!!" என்பவைபோன்ற விபரீதக்குறிப்புகளைக்காண்கின்றோம். கோயிலதிகாரிகளும் உத்ஸவக்காரர்களும், கொண்டாடுகிற இச்செயல்கள், உண்மையில் பெருமையுடையவைகளோ என்று இங்குச் சிறிது ஆராய்வோம்.

மனிதர்கள் தம்முடைய மனம் வாக்குக் காயங்களால் கடவுளை உள்ளபடி உணரமுடியாதவர்கள். அப்படிப்பட்ட பரம் பொருளை அடைவதற்கு ஐம்புல அடக்கமும், மனோலயமும், திருவருள் துணையும்வேண்டும். இவைகளை நாம் பெறுதற்காகவே இந்நாட்டில் ஆலயங்கள் எங்கும் ஏற்பட்டன. "கோயில் இல்லா ஊரில் குடி இருக்கவேண்டாம்" என்று பணித்ததும் இந்நோக்கத்தினால்தான். இப்படித்தோன்றிய கோயில்களில் நித்திய பூஜையோடு பெரியவிழாக்களும் நடைபெறுகின்றன. இத்திருவிழாக்களைப் பெரியோர் உண்டாக்கினதற்கு முக்கியகாரணங்கள் கீழே காட்டியவையா யிருக்கலாம். (க) பலஇடங்களில் வாழும் ஒரு சமயத்தினரை ஓரிடத்தில் சேர்த்தல். (உ) மெய்யடியார்கள் பலர் இயல்பாய் ஒருங்குசேர வசதிசெய்தல். (ங) கோயிலுக்குள் போகக்கூடாதவரென்று விலக்கப்பட்டுள்ள வகுப்பார்களும் கடவுளை வழிபட இடந்தருதல். (ச) சமயபோதனை செய்தல். (ரு) பொதுவாய்ப்பலவகையாலும், சமய உணர்ச்சி, பக்தி, சகோதரபாவனை என்பனவற்றை வளர்த்தல்.

இவ்விழாக்களால், அவற்றைக்காணவருவோரிற் பலர், உலகம் உயிர்கள், கடவுள் என்பவற்றைப் பற்றிய அடிப்படையான

உண்மைகளைத் தெரிந்துகொண்டு, கடவுளிடத்தும் உயிர்களிடத்தும், அன்பு பூண்டு வாழ வேண்டும் என்று தெளிந்து, நல்ல ஊக்கத்தோடு தம்வீடு திரும்புவதாயிருந்தால் உத்ஸவங்களுக்காக இப்போது செலவாவதைவிட இன்னும் பல ஆயிர ரூபாய் அதிகமாய்ச்செலவழித்தாலும் நாம் வருந்த இடமிராது. அந்தோ! இக்காலத்தில் பல கோயில்களில் நடப்பதென்ன? பக்தியும், நல்லொழுக்கமும் பெருகுவதற்கான போதனைகளும், மற்ற உபயோகமான செயல்களும் அங்கு காண்பது அரிது. ஜனங்கள்மனதை விகாரப்படுத்திக் கீழ் வழியில் இழுத்து விடுதற்கேற்ற பல ஆபாச ஆடம்பரங்களுக்கு மட்டும் அளவில்லை. விவரமாக எழுத இடமில்லையாதலால், மேலே குறித்த இரண்டு காட்சிகளை மாத்திரம் கவனிப்போம்.

ஒன்று விசேஷ பாணவேடிக்கை! இதற்குச் செலவு எவ்வளவு? நூற்றுக்கணக்கு ஆயிரக்கணக்கான ரூபாய். விளையும் பலன் என்ன? வெடி, புகை, பொறி, வாய்அங்காப்பு! முடிச்சவிழ்ப்பு!! நகை இழப்பு!!! சாமானியர் கண்ணுக்கும் மனதுக்கும் சிறிது இன்பமும், பெரியதுன்பமும் தருமொரு வழக்கத்திற்கென்று செல்வத்தை வாரியிறைத்தல் வழக்காகுமோ? பாருங்கள்! பாணவேடிக்கை முதலிய வீணுடம்பரங்கள் செய்வது ஜனங்களை ஆலயத்திற்கு வரவழைப்பதற்காக என்று சிலர் சொல்லுகிறார்கள். பாணவேடிக்கைபார்க்க வருகிறவர்கள் பரமனைப்பார்க்க மாட்டார்களோ. ஒருமுறை விக்கிரகத்துக்கும் ஒரு கும்பிடு போட்டுவிட்டால் அது செலவுக்குத் தகுந்த, பலனாகுமோ? ஆகாதே. இனிமையான பக்திப் பாடல்களைப் பாடுவித்தும் பின்னால் குறிக்கப்படும் இன்னும் பலகாட்சிகளை ஏற்படுத்தியும் ஜனங்களை வரவழைத்தல் மிகச் சிறந்த உபாயங்களாகுமல்லவா?

இரண்டாவது காட்சி இதை விட விநோதமானது: 'பரதநாட்டியத்தோடு சுவாமி கோயிலுக்கு எழுந்தருளுவார்!' அம்மம்ம! என்ன செய்தி! என்னபக்தி! என்னபுண்ணியம்!! ஐயோ, சகோதரர்களே! இப்படியும் நம் ஆலயங்களுக்குக் கேடுவரலாகுமா? அதைச்செய்தாலும் அதன்பயனைச் சிந்தித்துப் பார்த்துச்செய்தல்

அன்றோ முறை? வேசைகளைச் சுவாமி முன்பு ஆடச்செய்வது எதற்கு? தனக்கு ஒரு குறையுமில்லாது விளங்கும் பரிபூரணராகிய கடவுளை மகிழ்விக்கவா? பெரிய மந்தமதிகூட வேசையாட்டத்தால் விமலன் மகிழ்வான், என்று சொல்லமாட்டானே. உண்மை உரைப்பதானால் கோயிலைச்சேர்ந்த பலரையும் கெடுக்கவும், கடவுளை வழிபட வருபவர்களில் பலருக்குப் பாவமூட்டைகட்டிக் கொடுக்கவும், இஃது உள்ள தென்றல்லவா கொள்ளவேண்டும்? வேறு நல்ல பயன் ஏதாவதுண்டோ? யோசியுங்கள். பணச்செலவில்லாமல் இவ்விலைமாதர்கள் தங்களை விளம்பரப்படுத்திக் கொள்ளுகிறார்கள் என்பது மெய்தான். ஆனால் இதை எவரும் நல்லபலன் என்று கொள்ளமாட்டார்களல்லவா? அப்படியாயின், பெரிய மனிதர்கள் கைகட்டி நின்றும் பிரம்பு கொண்டு ஜனங்களை விலக்கியும் பரத்தையர் சந்நிதானத்தைக் கௌரவப்படுத்தியும், தொண்டு செய்வது இதற்காக என்று தெளிவது கஷ்டமே. சில புண்ணியர்கள், "வேசையர் கோயிலிலிருப்பதால் விளைவதுபாவந்தான். ஜனங்கள் ஏன் அவர்களைக் கவனிக்கவேண்டும்? கடவுளைக் கும்பிட்டுப் போகிறதுதானே?" என்றநியாயம் பேசுகிறார்கள். இதுவழக்கன்று. யோகிக்கும், ஞானிக்கும் இவ்வலிமை இருக்கலாம். திராணமற்ற மக்களுக்கு அந்த ஆற்றல் கிடையாது. உலக விவகாரங்களில் நெடு நேரம் மொத்துண்டு, மன அமைதியில்லாமல் கலங்குகிறவர்கள் தாம் கோயிலுக்கு வருகிறவர்களிற் பெரும்பாலார். "நிலைபெறுமாறு எண்ணுதியேல் நெஞ்சேநீவா" என்று சொல்லிக்கோயிலுக்கு வரவேண்டிய இவர்களுக்கு, உள்ள மனநிலையும் குலையும்படி கொடிய அசுத்தத்தைத்தேடித்தருதல்சிறிதும்தருமமாகாது. வேறுசிலஅறிவினர், "இந்த ஏற்பாடுகள் பெரியவாள் செய்தவை; சாஸ்த்ர ஸம்மதம்" என்கின்றனர். இஃது எம்மட்டில்உண்மை? "முன்காலத்தில் உலகவாழ்வில் இச்சையில்லாப் பெண்மணிகள் ஆலயத்தில் கடவுளுக்குத் தொண்டுசெய்து தம் வாழ்நாளைக் கழித்திருக்கலாம். பண்டைய ரோமா தேசத்து ஆலயங்களிலும் இத்தகைய பெண் தொண்டர்கள் இருந்தனர். அவர்களுக்கு "வெஸ்டல் வர்ஜின்." என்று பெயர். அன்றியும், தாம் செய்துகொண்டபிரார்த்தனைப்படி, தங்களுக்கு முதலில் பிறந்த குழந்தைகளைக் கோயிற்பிள்ளை

களும் கோயிற் பெண்களுமாக வளரும்படி சில தாய் தந்தையர் விட்டிருக்கலாம். இந்நாட்டில் எப்படி ஏற்பட்டிருந்தாலும், இக்கோயிற் பெண்கள் ஆதிகாலத்தில் வேசைத் தொழிலைச் செய்தவரல்லர் என்றே கொள்ளவேண்டி யிருக்கிறது. இவர்கள் விபூதி ருத்திராக்ஷமும், காவி (அல்லது வெள்ளை நிற உடையும்) அணிந்து, தெய்வத்திற்கு மாத்திரம் அடிமை செய்து வந்திருக்க வேண்டும். ஆதலால்தான் அவர்களுக்குத் தேவடியாள் என்னும் பெயர் வந்தது. (தே—தெய்வம்; அடியாள்—தொண்டு செய்பவள்) இப்பெயர், வயிறு வளர்த்தற்காகத் தம் உடம்பைப் பொய்யன் போடு விற்றுப் பாவத்தைப்பரப்பும் பரத்தையருக்கு எப்படிப் பொருந்தும்? உண்மையான தேவடியாட்கள் அல்லது தாஸிகள் (கடவுளுக்கு தாஸத்துவம் செய்பவர்கள்) பரதநாட்டியம் முன்பு செய்திருந்தாலும், காண்போருக்கு அந்நடனத்தின் பேரின்பப் பொருள்தோன்றியிருக்குமேயன்றிச்சிற்றின்பப்பொருள் தோன்றி யிராது. பழையபுத்தகங்கள் சிலவற்றில் கடவுளுபசாரங்களுள் ஒன்றாகச்சொல்லி யிருப்பதும் இந்தச் சுத்தமான நாட்டியத்தை யே. பிறரை மயக்கும் வேசையாட்டத்தையன்று. இதனால் இப் போது ஆலயங்களில் நடிக்கும் பெண்கள், தெய்வத்துக்குப் பணி செய்யும் தேவடியாட்கள் அல்லர் என்றும், வேடத்திலும் ஒழுக் கத்திலும் மாறுபட்ட வேசைகள் அல்லது விலை மாதர்கள் என்றும் வெளியாகிறதல்லவா? இவர்களை ஆலயத்தில் வைத்திருக்கும்படி எந்த சாஸ்திரமும் சொல்வதாக நாமறியோம். அப்படி ஒருநூல் சொல்லுமானால், தள்ளத்தக்க பல தாழ்ந்த நூல்களில் அதையும் ஒன்றாக எண்ணிக் கழிக்கவேண்டியதே.

> "தொன்மையவா மெனுமெவையும் நன்றாகா இன்று
> தோன்றியநூ லெனுமெவையும் தீதாகா."

என்று உமாபதி சிவாசாரியசுவாமிகள் திருவாய் மலர்ந்தருளியது சத்தியமன்றோ?

உண்மை இவ்வாறிருப்பதால் இக்கொடிய வழக்கத்தை ஒழித்துவிட யாவரும் முயலவேண்டும். 'நெடுநாள் பழக்கமாய்

விட்டதே ‘எப்படி ஒழிப்பது’ என்கிறீர்களோ? மைசூர் அரசாங்க
த்தார் காட்டியவழி நடப்போம். அதிகநஷ்டமில்லாமலே ஆலயங்
கள் சீர்பட்டுவிடும். முன்னமே முத்திரைபோட்டுக்கொண்ட
வேசைகளுக்கு இப்போது கோவிலில் கிடைக்கும் வருவாய் அவ்
வளவையும் அவர்கள் ஆயுள்முடிவு வரைக்கும் கொடுத்து விட
லாம். ஆலய சம்பந்தமாய் எந்த ஊழியமும் அவர்கள் இனிச்
செய்ய வேண்டியதில்லை யென்று சொல்லிவிடலாம். புதிதாக மாத்
திரம் எப்பெண்ணையும் முத்திரைபோடலாகாது. ஆனால் எப்பெண்
ணாவது, கடவுளுக்கு ஊழியம் செய்வதாகவும் புருஷர் முகம் பா
ராது பரிசுத்தமாய் வாழ்வதாகவும் விரதங்கொண்டு முன்வந்தால்-
அதாவது உண்மையான தேவடியாளாய் இருக்கவிரும்பினால்,
அவளுக்கு முத்திரையிட்டு அந்த தவநிலையில் இருக்கும்வரை
யில் அவளைக் கோயிலார் காப்பாற்றி வருதல் முறை என்னலாம்.
வேசைகளை வைத்திருத்தற்கு உண்மையில் நியாயம் இன்று. பரத
நாட்டியம் நடவாவிட்டால் சுவாமிக்குபசாரம் குறைந்து விடும் என்று
யாராவது நம்பினால், அவர் உண்மையான தேவடியாட்களைக்கண்டு
பிடித்து ஆலயத்தில் சேர்த்துப் பேரின்பப்பொருள் விளங்க நட
னம் செய்விக்க முயலுவாராக. எக்காரணத்தாலும் விலைமாதர்களைக்
கோயிலில் ஊழியக்காரர்களாக அமர்த்தக்கூடாது.

சகோதரர்களே! இன்னும்சும்மா இராதீர்கள். வேசைகள்நேசத்
தால் ஆலயங்களில் இறைவன் சாந்நித்யம் நாளுக்குநாள் குறைந்து
போகின்றது; அறிவாளிகள் பலர் இப்போதைய ஆலயங்களுக்கு
வரக்கூசுகிறார்கள். பக்திப்பயிரை வளர்க்க விரும்புவோரும் அங்
குச் செல்வதைவிட வீட்டிலிருந்து பூசிப்பதே மேலானது என்று
எண்ணுகிறார்கள். திருக்கோயில் வழிபாட்டைவற்புறுத்தும் ஆசாரி
யர்கள் திருவாக்கின்படி பலர் நடக்கமுடியாதுபோகிறது. அன்றியும்
பணம் எளிதில் கிடைப்பதா? அப்படிப்பட்ட பணத்தைக்
கோடானுகோடியாக நம் முன்னோர் ஆலயங்களுக்கென்று வைத்
தார்கள். நாம் அவைகளை வீண்போகவிடலாமா? உத்சவக்காரர்கள்
பணத்தாலும் அற்பவழிகளில் தொலைவதுமுறையாகுமா?

ஆலயப்பணத்தை எப்படிச் செலவிடுதல் நல்லது என்றால்,
மேற்சொன்னபடி அறிவு, பக்தி, நல்லொழுக்கம், என்பன பல

ஜனங்களுக்கும் உண்டாவதற்கான வழிகளில் செலவிடல் நல்லது என்போம். உத்சவகாலங்களில் எவை விமரிசையையும் பெரும் பயனையும் தரும் என்பதைக் கீழே எழுதுகின்றோம். அன்பர்கள் உற்றநோக்கி இயன்றவற்றைச் செய்வார்களாக. அதற்கு முன்னர் செய்யத்தகாதன சிலவற்றைக் குறிப்பிடலாம். தக்கை, வைக்கோல் அபிரேக்கு மினுக்குகளும் அவைதிகமாதலால் அவைகளை நீக்க வேண்டும். புராதன ஆலயங்களிற்போலப் புஷ்ப அலங்காரமே விரும்பத்தக்கது. மனம்போன போக்கெல்லாம் இறைவனையும் இறைவியையும் அலங்கரித்து, ஒழுக்கங்குறைந்த மக்களது விபரீத ஆசையை நிறைவேற்றுதல் தர்மகர்த்தர்களுக்கும், குருக்கள் மாருக்கும் பெரும் பாவத்தைத் தேடித்தரும். செய்யத்தக்கவை சில பின் வருமாறு:—

(க) விபரீத அலங்காரம், பாணவேடிக்கை முதலிய வற்றிற்குச் செலவிடும் பணத்தை நிறுத்திச் சைவர் திருவிழாக்களில் தேவாராதி திருமுறைகளையும், வைணவர் திருவிழாக்களில் நாலாயிரப் பிரபந்தத்தையும், இசைக் கருவிகளுடன் பாராயணம் செய்விக்கலாம்.

(உ) பொதுஜனங்களுக்குச் சமயஅறிவு புகட்டக் கூடிய பிரசங்கங்களுக்கும், துண்டுப்பத்திரிகைகளுக்கும் ஏராளமாய்ப் பணம் செலவிடலாம்.

(ங) உத்சவம் பார்க்க வருவோருக்கு, யந்திர விளக்குப் (Magic lantern) படம், 'ஸினிமா' என்பவற்றின் துணையால் இறைவன் புனிதத்திருவிளையாடல்களையும் அடியார்சரித்திரங்களையும் கட்புலனாக்கிச் சமய அறிவு புகட்டலாம். ஏழைகளுக்கு வரையாது உணவளிக்கலாம்.

(ச) இன்னும் பணமிருந்தால், நல்லவித்வான்களை வரவழைத்துப் பெரியவிஷயங்களை ஆராய்ச்சி செய்வித்து அவர்களுக்குத் தக்க வெகுமதிகள் தரலாம்.

இவைபோன்ற வழிகளில் உத்சவக்காரர்களும் கோயிலதிகாரிகளும், பணத்தைப் பயன்படுத்துவார்களானால் தேசத்துக்

குப் பெருநன்மை விளையுமல்லவா? அன்பர்களே! உங்கள் வசத்தில் ஆலயங்களிருந்தால் மேற்கொண்ட திருத்தங்களை இயன்ற மட்டும் உடனே செய்யுங்கள். முடியாவிடில் பிறரையாவது தூண்டுங்கள். இக்கருத்துக்களை எங்கும் பரப்பித் தற்காலத் திருக்கோயிலிழிவை நீக்கி அவற்றின் முன்னைப் பெருமையை மீட்டியுங்கள். இறைவனின் அறக்கருணைக்குப் பாத்திராவீர்கள். இச் சிறு விண்ணப்பம் உலகுக்கெல்லாம் அம்மையப்பராய் விளங்கும் அம்பிகைபாகர் திருச்செவிக்கும், எட்டுவதாக.

கோதிலா அமுதே! அருள்பெருகுகோலமே! இமையோர் தொழுகோவே!
பாதிமாதொரு கூறுடையானே! பசுபதி! பரமா! பரமேட்டி!
தீதிலா மலையே! திருவருள் சேர்சேவகா! திருவாவடுதுறையுள்
ஆதியே! எனை அஞ்சல் என்றருளாய், யாரெனக்குறவு? அமரர்கள் ஏறே!

சைவசித்தாந்தமும் ஆரியவேதமும்.

(பல்லாவரம் பொதுநிலைக் கழகத்துச் சுவாமி வேதாசலம் என்னும் மறைமலையடிகளால் எழுதப்பட்டது.)

ஆரியர்க்கு மிகப் பழையதாகிய "இருக்கு" வேதமானது ஆயிரத்துஇருபத்தெட்டுப் பதிகங்களையுடையது. அவற்றுள் இருநூற்றைம்பது பதிகங்கள் "இந்திரன்" மேலும், இருநூறு பதிகங்கள் அக்கி மேலும், நூறு பதிகங்கள் "சோமப்பூண்டின்" மேலும், ஏனைய எனைத்தேவர்கள் பலர் மேலும் பாடப்பட்டிருக்கின்றன. இவற்றுள் மூன்று நான்கு பதிகங்களே "உருத்திரர்" மீது பாடப்பட்டிருக்கின்றன. அதனால்உருத்திரர்க்குரிய பதிகங்கள் ஆரியராற் செய்யப்படாமல் தமிழர்களால் செய்துசேர்க்கப்பட்டனவென்பது புலனாம். அம் மூன்று பதிகங்களிலும் குறிக்கப்பட்ட உருத்திரர் கையில்வில்லும் அம்பும் வைத்திருப்பவராகவும், கொடியவராகவும், சிவந்த பன்றியைப்போல் அழித்தலைச் செய்பவராகவும் மருந்துகளைக் கையில் வைத்திருப்பவராகவும், பெரும்பாலும் சொல்லப்பட்டிருக்கின்றார். அவரைக் குறிக்கும் பதிகங்களெல்லாம் அவரிடத்திற் பேரச்சத்தினையும் அவரது சினத்தைத்

தனிப்பதையுமே பெரிதெடுத்துக் கூறப்படுகின்றன. சைவ சித்தாந்தத்தில் முப்பத்தாறு தத்துவங்கட்கு மேற்பட்டவராகவும் அன்புவடிவினராகவும் சொல்லப்பட்ட சிவத்தைப்பற்றிய குறிப்பு இருக்கு வேதத்தில் எங்குங் காணப்படவில்லை. அதனோடு சைவ சித்தாந்தத்தில் மிகவுயர்ந்தகடவுளாராகக்கொள்ளப்படும் "மகேசர்" "சதாசிவ"த்தைப்பற்றிய குறிப்பும் இருக்கு வேதத்தில் காணப்படவில்லை. சதாசிவர்க்குக் கீழ்ப்பட்டவர் மகேச்வரர். மகேச்வரர்க்குக் கீழ்ப்பட்டவர் உருத்திரர் அவ்வுருத்திரரைப் பற்றியகுறிப்பு மட்டும் இருக்குவேதத்தில் சுருக்கமாகக் காணப்படுகின்றது. சைவசித்தாந்தப்படி சதாசிவர், மகேஸ்வரர், உருத்திரர் என்னும் மூவர்க்கும் மும்மூர்த்திகட்கும் மேற்பட்ட முழுமுதற் கடவுளே சிவம் என்பது, "தேவர்கோ வறியாத தேவதேவன் செழும் பொழில்கள் பயந்து காத்து அழிக்கும் மற்றை மூவர் கோனாய் நின்ற முதல்வன்" என்றும், "மூவரென்றே எம்பிரானொடு மெண்ணி விண்ணாண்டு மண்மேல்,தேவரென்றே இறுமாந்து என்னபாவம் திரிதவரே." என்றும்,

"பூவேறு கோனும் புரந்தரனும் பொற்பமைந்த
நாவேறு செல்வியு நாரணனு நான் மறையு
மாவேறு சோதியும் வானவருந் தாமறியாச்
சேவேறு சேவடிக்கே சென்றூதாய் கோத்தும்பீ"

என்றும் போந்த திருவாசகத் திருப்பாட்டுக்களால் நன்குணரப்படும். அங்ஙனமாயின். "சுக்கில எசுர்வேத வாஜச்நேய சம்கிதை"யில் காணப்படும் "சதருத்ரீயம்" என்பது சிவபிரான் மேற்றாய் இருத்தல் என்னைபோவெனின், இருக்கு வேதத்தில் காணப்படாமல் சுக்கில எசுர் வேதத்தின்கண் மட்டும் காணப்படும் இப்பகுதி பிற்காலத்தே எழுதிச் சேர்க்கப்பட்ட தென்பது துணிபொருளாம். யாங்ஙனமெனின், எசுர், சாமம், என்னு மிரண்டு வேதங்களிலும் காணப்படும் மந்திரங்களிற் பெரும்பாலன இருக்கு வேதத்தினின்றும் எடுக்கப்பட்டன வாகும். சாமவேதம் சோமயாகத்திற் குரியதாய் இருக்கு வேதத்தினின்றும் முற்றுமே யெடுத்துச் சிறிது திரித்துச் சில பதிகங்கள் புதிது சேர்க்கப்பட்டதாகும். எசுர்வேதமோ எல்லா யாகங்கட்கும் உரிய பகுதி

கள் உடையதாகச் செய்யப்பட்டமையின், பல பதிகங்கள் இருக்கு வேதத்தினின்றும் இதன் கண் எடுத்துக்கொள்ளப்பட்டதோடு, அதன்கட் காணு இன்னும் பல பதிகங்களும் புதியவாகச் செய்து இதன்கட் சேர்க்கப்பட்டமையின், அங்ஙனஞ் சேர்க்கப்பட்ட பிற்காலத்தே தமிழர்கள் வணங்கிய முழுமுதற் கடவுளாகிய சிவபெருமான் பெருமை உணர்ந்து, ஆரியர்கள் தாம் முதலில் வணங்கிய இந்திரன் முதலான தேவர்கள் வழிபாடு சிறந்த தல்லாமை கண்டு அதனைக் கைவிட்டுச் சிவ வழிபாட்டினையே சிறந்தெடுத்து அதனையே "சதருத்ரீய"த்தின்கண் மிகுத்து வைக்க ஒருப்பட்டார். இது வேதங்கட்குப் பின்னெழுந்த உபநிடதங்களாலும் துணியப்படும். பன்னிரண்டு பழைய உபநிடதங்களில் மிகப் பழையதாகிய கேனோபநிடதத்தில் இயக்க வடிவந்தாங்கி எழுந்தருளிய சிவபெருமானே முழுமுதற் கடவுளாதல், உமாதேவியாரால் இந்திரன் முதலான தேவர்கட்கு அறிவுறுத்தப்படுதலும் அவ் இந்திரன் முதலான தேவர்கள் கடவுளர் அல்லரென்று சில பெறுத்தப் படுதலும் விளக்கமாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. இது கொண்டு ஆரியர்கள் தமிழர்களோடுகலந்து அவர்கள் செய்து போந்த முழுமுதற் கடவுள் வழிபாட்டை அறிந்தபின் தாம் வணங்கிவந்த இந்திரன் முதலான தேவர்கள் வழிபாட்டைக் கைவிட்டமை நன்கு பெறப்படும். இக் குறிப்புகளால் வேதங்கள் சைவசித்தாந்தத்திற்குரிய பிரமாண நூல்களாக மாட்டா என்பதும், அவைகள் சிறுதேவர்களின் வழிபாட்டைப் பெரும்பாலும் குறிக்கும் ஆரிய நூல்களேயாமென்பதும் தெளியப்படும்.

தாய்மொழியை வளர்த்தல்.

(உகக-ம் பக்கத் தொடர்ச்சி)

(உ) துரைத்தனம்

நமது மொழியை வளர்த்தற்குற்ற உரிமையையும், கடமையையும், போதிய ஆற்றலையும் பெற்றிருப்பன சென்னை, இலங்கை ஆகிய இரண்டு துரைத்தனங்களும்; பெரும்பாலும் துரைத்தனத்தாலேயே நடத்தப்பெற்று வரும் சென்னைச் சர்வ கலாசாலையுமேயாம். இவை, தமது கடமையை

உணர்ந்து நமது மொழியைவளர்க்க முன்வருமாயின், அவற்றிற்கும் அத் துறையில் அதிகத்தொல்லைகள் உண்டாகமாட்டா; நமது வேண்டுகோளும் இனிது நிறைவேற்றப்படலாம். அவை, முதலில் தம்முடைய அதிகார எல்லை களுக்குட்பட்ட அனைத்து நடபடிக்கைகளையும் நமது தாய்மொழியாம் நண்டமிழ் மொழியிலேயே செய்துவரல் வேண்டும். இக்குந் தாங்கள் செய்ய வேண்டியஅனைத்தும்—வேண்டுகோள்களோ, கட்டளைகளோ, அறிவிப்புக் களோ—தமிழ் மொழியைத் தாய்மொழியாகக்கொண்ட குடிமக்களிடத் திலேதான் என்பதையும்; தங்களால் காக்கப்பட வேண்டியவர்களும், கற் பிக்கப்பட வேண்டியவர்களும் தமிழர்களே என்பதையும்; தங்களுக்கு வரும் பொருள்கள் அனைத்தும் தமிழர்கள் அரிதிலே தேடிக் கொடுப்பனவே என் பதையும்; தாங்கள் செய்யும் அதிகாரமும், அடையும் பெருமையும் தங்களைப் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுத்த தமிழர்களாலேயே தங்களுக்குக் கிடைத் தன என்பதையும் அடியேன் அவற்றை நடத்துவோர்க்கு நினைப்பூட்ட வேண்டியதில்லை. இங்ஙனம் நடைபெறுதற்குத் தாய்மொழியைப் பயிலாது படித்துப் பட்டம்பெற்றுப் பட்டதாரிகள்எனப் பலரும் வெளிவரக்கூடியதாக இருக்கும் தற்காலக் கல்விமுறை முதலில் அடியோடு மாற்றப்படல் வேண் டும். உலகத்தில் நமதுநாடு (இந்தியா) ஒன்றுதான் தாய்மொழியைப் பயி லாமல் பட்டதாரிகள் வெளிவரக்கூடிய நிலைமையில் உள்ள நாடாகும். இது பெரிதும் வருந்தத்தக்கதே. இந்தகைய இழிந்த நிலைமை எவ்வளவு விரை வில் நீக்கப்படுகின்றதோ அவ்வளவு விரைவில் நமது மொழியும், நாடும் முன் னேறும் என்பது தவறாகாது. இக்கருத்தே பலசான்றோர்க்கும் உடன் பாடாம். இம்மட்டோ தற்கால முறைமை? தாய்மொழிக்கு முதல் இடம் கொடுக்காததோடு தாய் மொழியைக் கற்றவர்களும் இழிந்தவர்களாகக் கருதப் படுகின்றார்கள். அந்தோ! வெட்கம்!! வெட்கம்!!! ஆதலின், அவை, உடனே தற்காலக் கல்விமுறையை மாற்றித் ‘தாய்மொழியைப் பயிலாது பட்டதாரி களாக இனி எவரும் வெளிவரமுடியாது’ என்ற கண்டிப்பான கட்டளை யைக் செய்து கைக்கொள்ளல் வேண்டும். அன்றியும், அவை, எங்கெங்கே தாய்மொழியை வளர்த்தற்குப் பாடுபடப் பொதுஜனங்கள் முன்னுக்கு வரு கின்றார்களோ அங்கங்கெல்லாம் தங்களுடைய உத்தியோகஸ்தர்களை அனுப்பி அவர்களுக்கு ஊக்கமளித்துவர முயலுவதுடன் அவர்களது முயற்சிக்குப் போதிய அளவு பொருளுதவி செய்தும் வரல்வேண்டும். அதிகம் சொல்லு வானேன். அவை, அடியேன் முன்னே கூறியுள்ளவண்ணம் அனைத்து முயற்சிகளுக்கும் வெளிப்படையாக முன்வந்து அவற்றிற்குத் தக்கவாறு போதிய அளவு எல்லாத் துறைகளிலும் உதவி செய்து வளர்த்து வரல் வேண்டும். மேலும், அவை ‘எத்தகைய அரிய உயரிய பிறமொழிக் கருத் துக்களையும் தங்களுடைய குடிமக்களாகிய (எஜமானர்களாகிய) பொது ஜனங்

கள் தங்கு தடையின்றித் தங்கள் தங்களது தாய்மொழியால் விரிந்து விளக்கி உரைத்துக் கொள்ளும் தகுதியினையும், அறிவினையும், ஆற்றலினையும் பெற்றிருக்கின்றார்கள்' என்று பெருமை பேசிக் கொள்ளத்தக்க நிலைமை உண்டாவதே மிகமேலான ஆட்சியின் அறிகுறி என்பதையும் அறிந்துகொள்ளல் வேண்டும். இதுபற்றிக் கூறிக்கொண்டே போகலாம். எனினும், அடியேன் அங்ஙனங்கூற முன்வரவில்லை. ஆனால், 'ஒரு நாட்டின் அறிவு வளர்ச்சிக்கும், சமய வளர்ச்சிக்கும், ஆட்சி முதலிய பிறவற்றின் வளர்ச்சிக்கும் துணை செய்வதற்கு அந்நாட்டினர் ஒவ்வொருவரும் "முதலில் தத்தம் தாய்மொழியையும், இரண்டாவதாகத் தத்தம் சமயச் சார்பான உயர்வையும் அறிவையும் வளர்க்கத்தக்க கருத்துக்கள் நிறைந்த மொழியையும், பின்னர் ஆட்சியாளரின் மொழியையும் கற்றல்வேண்டும்" என்று பலபெரியோர்களுங் கூறுவது நம்மனோரால் உய்த்துணரத் தக்கது. என எடுத்துக்கூற அடியேனால் முன்வராதிருக்கமுடியவில்லை. இக்கருத்துப்பட முன்னம் ஒருகால் மாட்சிமிக்க பரோடா அரசர் அவர்கள் கூறியதும் அடியேனது நினைவிற்கு வருகின்றது. இம் மூன்றும் ஒரேமொழியில் அமைந்துள்ள நாடுகளும் இருக்கின்றன. அத்தகைய நாடுதான் விரைவில் முன்னேறக்கூடியதும். நமது நாடும் ஒருகால் அத்தகைய உயரிய மேலான நிலைமையில் இருந்ததே. நமது தாய்மொழியும் அம்மூன்றையும் ஒருசேரக் கொண்டுள்ளதே. என்செய்வது! தற்பொழுது சிறிதும் ஆற்றலற்றிருக்கின்றோம்! எனினும், இத்தகைய நிலைமை எந்நாட்டிலும், எப்பொழுதும் நிலைத்திருக்க முடியாதாதலின் நமது மொழியும் விரைவில் விடுதலைபெறும் என்பது ஒருதலை. அதற்கு இற்றைக் கூட்டமே ஓர் ஒப்பற்ற அறிகுறியாம். இங்கு நமது பிரதிநிதிகளிற் சிலர் "எதனையும் சொல்லலாம்; ஏதும் செய்தல் எளிதன்று" என்று கூறி அடியேனது கருத்தை மறுக்கப்பார்க்கலாம். ஆனால், அடியேன் அதற்கு அன்னாரைநோக்கி "மரியாதைக்குரிய ஐயன்மீர், தாங்கள் சொல்லும் கருத்தடங்கிய குறட்பாவை அடியேன் அறிவேன்; எனினும், 'எண்ணுந்தோறும் மேன்மையையே எண்ணல் வேண்டும்;' 'பெரியோர் செய்தற்கரிய காரியங்களையே செய்வர்' என்றுள்ள கருத்துக்களடங்கிய குறட்பாக்களையும், 'மனமிருந்தால் வழி பிறக்கும்' என்றுவரும் பழமொழியையும் தாங்கள் தயை செய்து பன்முறையும் ஊன்றி யறியுங்கள்; அப்பால் அடியேனது கருத்தை மறுத்துரையுங்கள்" எனத் தாழ்மையுடன் வேண்டிக்கொள்வதால் மீட்டும் அடியேனது கருத்தை நிலை நிறுத்த முயலுவேன். நிற்க, "பொறியின்மை யார்க்கும் பழியன்று அறிவறிந்து—ஆள்வினை இன்மை பழி" என்ற பொய்யாமொழியையும் நினைப்பூட்டுவேன்.

பொது.

இந்நிலையில், ஒரு சாரார் பிறமொழிகளிலுள்ள எல்லாக் கருத்துக்களையும் எளிதில் அறிவிக்கத்தக்க ஆற்றலுள்ள சொற்கள் தமிழ்மொழியில்

இல்லை என்றும், பிறிதொருசாரார் பிறமொழிகளிலுள்ள எத்தனையோ கருத்துக்களுக்கும் தமிழ்மொழியிற் சொற்களைப் படைத்துக்கொள்ளலாம் என்றும், வேறொரு சாரார் பிறமொழிகளிலுள்ள கருத்துக்கள் கலக்கப்படவேண்டுமாயின் அக்கருத்துக்களை அறிவிக்கும் அந்த அந்தப் பிறமொழிச் சொற்களை அப்படி அப்படியே நமது எழுத்துக்களால் எழுதிச்சேர்த்துக் கொள்ளலாம் என்றும், மற்றும்பலர் வேறுபலமாதிரியாகவும் மொழி பெயர்த் தலைப்பற்றிய கருத்துக்களை ஆங்காங்கு வெளியிட்டுள்ளார்; வெளியிட்டும் வருகின்றனர். இது பற்றி ஒருவகை முடிவு விரைவில் ஏற்பட்டே தீரும். அதுவரையில் 'ஊருடன் கூடிவாழ்' என்றபடி நாமும் நமது வழியே செல்ல வேண்டியதுதான். அஃது எங்ஙனமாயினும் ஆகுக. எங்ஙனம் ஓடுகின்ற யாற்றுநீர் தன்னொடு கலக்கும் பிற வேற்றுநீர்களைத் தடையின்றிச் சேர்த்துக்கொண்டு அவற்றைத் தன்னிறமேயாக்கிச் சிறிதும் தன்னியல்பினின்றும் வழுவாது பின்னரும் ஒழுகுகின்றதோ அங்ஙனமேதான் நமது தாய் மொழியாம் தண்டமிழும். எங்ஙனமெனில், நமது தமிழ்மொழி ஓடுகின்ற யாற்றுநீர்போலப் பேச்சு வழக்கில் உள்ள மொழிகளுள் ஒன்றாயுள்ளது. இது முன்னரும் கூறப்பட்டது. ஆதலின், இதனுள் வேற்று நீர்களைப் போன்ற பிறமொழிக் கருத்துக்கள் வந்து சேருவது இயல்பே. சேரவேண்டும் என்பதுதான் நமது விருப்பமும். அதுதான் மொழியின் வளர்ச்சியைப் பெருக்க வல்லதும். இங்ஙனமேதான் பிற பேச்சுவழக்கிலுள்ள மொழிகளும் வளர்ந்து வருகின்றன. இதற்கு உதாரணமாக அங்கிலம், ஜப்பான், வங்கம், ஆந்திரம் முதலிய நாட்டுமொழிகளைக் கூறலாம் என்க.

இனி, நமதுமொழி இத்தகைய மாறுதலுக்குற்ற தகுதியினைப் போதிய அளவு பெற்றிருக்கின்றது என்பதை விளக்கலும் பொருத்தமானதே. அதற்குத் தற்காலம் பல அறிஞர்களாலும் வெளியிடப் பெற்றுள்ள பலசிறப்புற்ற நூல்களையும் குறிப்பிடல் வேண்டும். அதனால் நமது தாய் மொழியாந் தண்டமிழ் காலத்திற்கேற்ற கருத்துக்களைத் தன்னகத்துக் கொள்ளும் தகுதியினைப் பெற்றிருக்கின்றது என்பதும் உறுதியுறும். எனினும், இங்கு, அடியேன், அவையிற்றைக் குறிப்பேனாயின், அஃது ஒரு பெரிய அட்டவணையாக நீண்டு உங்களது உயிரினும் சிறந்த காலத்தை வீணாக்கும். ஆதலின், அதனைக் கூறாது விடுகிறேன்.

இங்கு 'இங்ஙனம் வளர்ந்துவரும் மொழியை எங்ஙனம் தாழ்ந்த நிலைமையில் உள்ள மொழியாகக் கூறலாம்?" என ஒரு சிலர் கருதக்கூடும். ஆனால், அன்னார், தயைசெய்து சிறிது பொறுமையுடன் அடியேன் முற்கூறியாங்கு நமது நாட்டுப் பரப்பின் அளவையும், நமது மொழியைப் பேசும் மக்களது தொகையின் பெருக்கையும், பிற மதெளோ சேர்க்க நமது நாடு

இருக்கும் பிற்போக்கையும் ஊன்றி நோக்குவாராயின் அவர்க்குத் தவறாது அடியேன் கூறுவதன் உண்மை இனிது புலனாகும். ஆகவே, நமது நாட்டின் முன்னேற்றத்திலும், மொழியின் வளர்ச்சியிலும் விருப்பமுள்ள ஒவ்வொருவரும் தம்மால் இயன்ற அளவு உண்மையுடன் உழைக்க முன்வரல் வேண்டும் என்பது பெறப்படுகிறது.

நிற்க, ஒரு மொழியிலுள்ள அரிய பெரிய கருத்துக்களைப் பிறிதொரு மொழியில் மொழி பெயர்த்தல் எளியதொரு வேலையன்று; அஃதொரு பொறுப்புடைய வேலையேயாம். அன்றியும், மொழிபெயர்ப்பதனால் அந்த அந்த மொழிகளுக்குள்ள இயற்கையான சிறப்புக்கள் கெடாதிருத்தலும் வேண்டும். 'ஒண்டவந்த பிடாரி ஊர்ப்பிடாரியை விரட்டிற்றாம்' என்ற பழமொழிக் கிலக்காகப் புதுக்கருத்துக்கள் நுழைந்து மொழி பெயர்ப்பு மொழியின் பழைய பெருமைகளை மறைத்து விடாத நிலைமையிலும் அம்மொழிபெயர்ப்பு அமைதல் வேண்டும். மேலும், இங்ஙனம் மொழி பெயர்த்தல் முதலிய செய்தற்கோ தாம் மொழி பெயர்க்க முயலும் மொழிகளில் வல்லுநராகப் பலர் முன்வரல் வேண்டும். அன்னார் மிக்க பொறுமையாளராகவும், நடுநிலையாளராகவும், 'தந்நலத்தினும் நாட்டின் நலமே பெரிதாம்' என்ற கொள்கையினை உடையாராகவும், பொருள் முட்டுப்பாடு இல்லாதவராகவும் இருத்தல் வேண்டும். அன்றியும், அன்னார்க்கு உதவி புரியப் பலமொழிகளிலும் வல்ல பல அறிவாளிகள் அடங்கிய ஒரு கழகமும், பொருளுதவி செய்யத்தக்க வசதிகளும் இருத்தல் வேண்டும்.

இங்ஙனம் தந்தம் மொழியிடத்துள்ள குறைபாட்டை உணர்ந்த மொழிப் பற்றுடையார் அனைவரும் "என் செய்வது?" என்று எண்ணி மடிந்து வாளா இராது, அக்குறைபாட்டை "முயற்றின்மை இன்மை புகுத்தி விடும்" என்றபடி நமது முயற்சிக் குறைவினால் வந்தது எனக்கருதி பலர் ஒன்று சேர்ந்தும், தனித்தனியாகவும் இயன்ற அளவு ஒவ்வொரு துறையிலும் "முயற்சி திருவினை யாக்கும்" என்றதைக் கடைப்பிடித்து ஊக்கத்துடனும் நம்பிக்கையுடனும் உறுதியாய் உழைக்க முன்வரல் வேண்டும். அங்ஙனம் முயன்றால் இக்குறைகள் மிக விரைவில் நீங்கி விடலாம். இங்கே, 'தமிழின் அபிவிருத்தி' என்ற தலைப்பின் கீழ் 'தமிழ் வரலாறு' என்ற ஆராய்ச்சி உரையில் அறிஞர், ஸ்ரீமான். ராவ்பகதூர் கே. ஸி. ஸ்ரீநிவாஸபிள்ளை அவர்கள் எழுதியுள்ளபகுதியும், "சேணிற் பறக்கின்ற செந்தமிழ்க்குதிரை முன்—திட்டேது தட்டேது காண்" என்ற பழைய தொடர் மொழியும் ஊன்றியறியத்தக்கனவாம்.

ஏன் வளர்த்தல் வேண்டும்?

உலகத்தில் மக்களாய்ப் பிறந்தார் எவரும் தமது நாட்டைத் தாழ்ந்தநிலைமையிற் பார்க்க உடன்படார். ஆனால், உயர்ந்த நிலைமையிற் பார்க்கவே விரும்புவர்; அதற்கான முயற்சியையும் இயன்ற அளவு செய்வர். ஒரு நாடு தாழ்ந்த நிலைமையிலிருந்து உயர்ந்த நிலைமையை அடைய வேண்டுமானால், அந்த நாட்டினரிடம் உண்மை, உறுதி, ஊக்கம், ஒற்றுமை, சமத்வம், தந்நயங்கருதாமை, தன்மதிப்பு, நடுநிலை, அஞ்சாமை, ஆண்மை முதலிய நறுங்குணங்கள் இருத்தல் வேண்டும். அத்தகைய நறுங்குணங்களோ எல்லோரிடத்திலும் எளிதில் வந்தடையக் கூடியன அல்ல. அவை ஆய்ந்த கல்வி, நிறைந்த கேள்வி, தக்கார்களது சேர்க்கை முதலியவற்றால் ஒருவருக்குண்டாகலாம். இவற்றுள்ளும் முதன்மையானது கல்வியே.

இத்தகைய, அறம் பொருள் இன்பம் வீடு என்ற நாற்பெரும் பேறுகளையும் அளிக்கவல்ல, இன்றியமையாத கல்வியோ இளமையிலேயே கற்று வளர்த்துக்கொள்ள வேண்டியதாகின்றது. இளமைப் பருவத்திற் கற்பதற்கோ தாய்ப்பாலோடும், உதிரத்தோடும் கலந்து வளர்ந்து வருகிற அவர் அவர்களது தாய்மொழியே அன்றி, மிக மிகத் தேர்ச்சி பெற்ற அறிவாளர்களையும் 'எங்ஙனம் உச்சரிப்பது பிழைபட்டதாகாது' என்று மயக்கவல்ல பிற மொழிகள் உயர்வுடையன ஆகா. அன்றியும், அவை, தாய் மொழியால் அடையும் பயனைப்போன்ற அத்துணைச் சிறந்த பயனை எவர்க்கும் எளிதாகவும் விரைவாகவும் கொடா. எனவே, எத்தகைய கருத்துக்களையும் எவரும் எளிதாகவும், குறைந்த கால அளவிலும் அறிந்து கொள்வதற்கு அவர் அவர்களது தாய் மொழியே மேலான துணை செய்வதாகும் என்பது பெறப்படுகின்றது. பல அறிஞர்களது கருத்தும், உலக அனுபவமும் இஃதேயாம். "அறிவுடையார் எல்லாம் உடையர்" என்ற தேவர் வாக்கும் ஈண்டுச் சிந்தித் துணரற்பாலது.

வளர்க்காவிடில் வரும் இழுக்கு என்னை ?

இது வரையில் அடியேன் கூறியுள்ள குறைகள் நமது மொழிக்கு இழுக்கைத் தருவன அல்லவா ? என்று கேட்பதே இதற்குப்போதிய விடையை அளிக்கும் என்பது ஒருதலை. என்றாலும், "தாய்மொழியைப் போற்றி வளர்க்காதிருப்பது ஜாதியத் தற்கொலையாகும்" என்று மகாத்மா காந்தி அடிகளார்கூறியதையும் இதற்குற்ற நல்லதொரு விடையாகக்கூற அடியேன் வருகின்றேன். இஃதொரு பேரிழுக்கன்றோ ?

வளர்த்தலால் வரும் பயன் யாது ?

இத்துணையும் கூறியது கொண்டே இவ்வினாவுக்குப் பொருந்திய விடையை அறிந்து கொள்ளவேண்டும். எனினும், அடியேனும் எடுத்துக்

கொண்டதற்கேற்பச் சில சொல்லி நிறுத்துவேன். நமது மொழியைப் போலவே தற்காலத்திற்கு வேண்டும் பலவற்றையும் தன்னகத்துக் கொள்ளாக் குறையைப் பெற்றிருந்த வங்காளமொழி தன்னுடைய அன்பர்களால் தன்னிடமிருந்து அக்குறைகளினின்றும் நீங்கி இப்பொழுது நூல் வளத்தாலும், கருத்து நிறைவாலும், பிறவற்றாலும் குறைவுபடாத இந்தியமொழிகளில் ஒன்றாக விளங்குகின்றது. அம் மொழிக்குரிய வங்காளிகளாகிய நமது (இந்திய) சகோதரர்களோ அடியேன் முற் கூறியாங்கு முன்னேற முயலும் ஒரு நாட்டினரிடம் இருக்கவேண்டிய நற்குணங்கள் பலவற்றையும் பெற்றிருப்பதோடு கல்வி, செல்வம் என்ற இரு பெரும்பேறுகளையும் பெற்று நம்மவருள் (இந்தியருள்) முதன்மையினராகத் தலைசிறந்து விளங்கிவருகின்றார்கள். அவர்களை அத்தகைய பெருமைக்கும், முதன்மைக்கும் உரியவர்களாக்கியது அவர்களது விடாமுயற்சியின் பயனால் வளர்ந்த அவர்களது தாய்மொழி (வங்காளமொழி) யின் திருந்திய பெருக்கமே யன்றிப் பிறிதன்று. இவற்றினும் மேம்பட்ட பயன் உண்டோ? இஃதன்றோ மொழிப்பற்று! இங்ஙனம் முயன்றாலன்றோ எவரும் முன்னேறலாம். இங்ஙனமே, நமது பக்கத்திலிருந்து மிக விரைந்து முன்னேறிவரும் நமது ஆந்திர சகோதரர்களது நன் முயற்சியும், அதனால் அவர்கள் அடைந்துவரும் பெருமையும், ஜப்பான் மிகத் தாழ்ந்தநிலைமையிலிருந்து மிக விரைவில் இவ்வளவு மேலான நிலைமைக்கு வந்த வரலாறும், பிறவும் நம்மனோரால் உய்த்துணரத் தக்கனவாம்.

முடிவுரை.

அறிஞர்களே, அடியேனது புல்லறிவுக்கெட்டிய அளவு ஏதோ சிலகூறினேன். இனி, நல்லறிவுள்ள தாங்கள் "ஞாலங்கருதினும் கைகூடும் காலங் கருதி இடத்தாற் செயின்" என்ற நல்லுரையை நாடி, ஒன்றுகூடி, நன்கு ஆராய்ந்து, தக்கது செய்து நமது தாய்மொழியாந் தண்டமிழைக் காலத்திற்கேற்றவாறு பல துறைகளிலும் வளர்த்துப் பெரும் புகழ்பெறுவீர்களாக.

தண்டமிழ் மொழியைத் தரணியில் உயர்த்துவான்
எழுமின் தமிழர்காள்! எழுமின்! எழுமின்!
உழைமின்! உழைமின்! ஓயாது உழைமின்!
பெறுமின் உயர்நிலை! பெறுமின்! பெறுநீரே!

தெய்வபக்தியும் அதன்பயனும்.

தெய்வபக்தி யென்பது எல்லாதேச, மத, குல, ஆசார வர்க்கத்தவர்க்கும் ஒப்பமுடிந்த பொதுவிதி. தெய்வத்தினிடத்து பக்தி செலுத்தவேண்டு மென்பதை மறுப்பார் எங்கும் எப்போது மிலர். ஆஸ்திகர்களாய்ப் பிறந்தோர் யாவருக்கும் கருவிலேயே அமைக்கப்பட்ட திருவாகும் தெய்வபக்தி யென்பது. சிறு பருவமுதலே "சுவாமியைக் கும்பிடு" "வீண்வார்த்தைகள் பேசுவதைவிட்டு கடவுளின் திவ்ய நாமங்களில் ஏதேனும் ஒன்றைச் சொல்லிக்கொண்டிரு" என்று பெற்றோர்களாலும், பெரியோர்களாலும் போதிக்கப்படுவது நமது நாட்டின் பழையகாலப் பண்பட்டவழக்கம். தெய்வபக்தி யென்பதை அந்தந்த நாட்டிற் கேற்றவாறு அவரவர் குலாசாரக் கொள்கைப்படி செய்து வருதலே சாலச் சிறந்தது. எக்காரணத்தைமுன்னிட்டும் தத்தம் பூர்வீக சமயாசாரத்தை மாற்றுதிருத்தலே மானிடராய்ப் பிறந்தார் கடைப்பிடித்தொழுக வேண்டிய அறங்களில் முதன்மையானதாம். ஒருவர் வேறுசமயக்கொள்கைகளில் குற்றங்காணலும், குறைகூறலும், பழியுரைத்தலும், புறம்பேசலும், வாதுக்கழைத்தலும், தூஷணைசெய்தலும் நிந்தனையே சிந்தனையாயிருத்தலும், ஆஸ்திக தர்மத்திற்கு அழகாகமாட்டா. எங்கும் நிறைந்து எல்லாமுணர்ந்த சர்வேஸ்வரன் தேசங்கள்தோறும் அந்தந்த தேசாசார, குலாசார சமயாசார, வழக்கப்படி இலங்கிநின்று அவரவர் பக்திக்கேற்ப மனோபீஷ்டப்படி கருணைசெய்வது பிரத்தியட்ச அனுபவம். மோட்ச பூமியென்றழைக்கப்படும் நமது நாட்டிலேயே கடவுள் வழிபாடு சகுணமாகவும், நிர்க்குணமாகவும், திரி மூர்த்திகளாகவும் ஆண்பாலாகவும் பெண்பாலாகவும், உயர்திணையாகவும், அஃறிணையாகவும், மற்றும் சில்லரைத்தேவதைகளாகவும் போற்றப்படல் நிதரிசனமல்லவா? கடவுள் பெரிய விருக்ஷமாகவும், உபாஸனாக்கிரமம் அவ்விருக்ஷத்தின் கிளைகளாகவும் பாவியிருப்பதாக எண்ணி தற்கால அவசியமும் அவசரமும் ஆகிய பலனைப் பெறக் கிளைகளே முக்கியமெனக் கொள்வாருமுண்டு. இலை, பூ, பிஞ்சு, காய், கனி, வித்து முத

விய பலவும் கிளைகளின் வாயிலாகவே பெறக்கூடுமாதலால், சில பல உபாஸனுமூர்த்திகளின் வழியாகவே இகலோக பலன்களைப் பெற்று, இதனுல் பொருள்தேடி, தானதருமம் முதலியனசெய்து இவ்வழியாகப் பரலோக சுகமும் அடையலாம் என்பது இவ் வுபாஸனுமுறையாளரின் கருத்தாம். இவ்வாறு சில்லரைப்பலன் களைப் பெறுதற்குக் கிளைகள் ஜீவித்திருத்தல் வேண்டும். கிளை கள் ஜீவித்திருக்க மரம், செழிப்புடன் வளர்ச்சிபெறல்வேண்டும். எனவே கிளைகளின் போஷணைக்காக மரம் கிளைகளுக்கு ஆதா வளிக்கவேண்டும். ஆகவே மரத்திற்கு ஜலம்விட்டு சரிவரப்போ ஷித்துவந்தால் மரத்தின் வேரில் ஊற்றிய ஜலம் பல கிளைகளுக் கும் சென்று, அவற்றைப் பலவிடத்தும் செழுமைபடையச் செய்து கிளைகளின் வாயிலாய்ப் பலவிதபலன்களையும் அடையலா மாகையால், பல கிளைகளுக்கும் மரமொன்றே ஆதாரவாயிருத்தல் போல, பல சமயங்களுக்கும் ஆதாரவாயுள்ள ஆதிபகவான் ஒரு வனையே ஸ்திரபுத்தியுடன் நாடி சத்துவகுணத்துடன் வந்தனை வழி பாடு செய்துவரில் இகபரசுகங்கள் யாவும் எளிதிற் கைகூடும்.

இப்படிப்பட்ட சத்துவகுணதெய்வபக்தியைக் கைக்கொண்டு அதன் ஒப்பிலாப்பயனை நேராக அடையவேண்டுமாயின் அதற்குப் பொதுவாய் அமையவேண்டுவது அன்பு. அந்த அன்பானது நமது குடும்பம், பெற்றோர், உற்ருர், உறவினர், அரசன், பொது ஜனங் கள், இவர்களிடத்து அமைவது சர்வசாதாரணம். ஆதலால் தனக்காக, தன்போஷணைக்காக, தனக்குரியவர்களுக்காக நடந்த, நடக்கிற, நடக்கவேண்டிய கடமைகளுக்காகப் பிறரிடம் அன்பு காட்டியே தீரவேண்டிய அவசியம் ஒவ்வொரு மனிதனுக்கும் இன்றியமையாது வேண்டப்படும் இயற்கைக் கடனும். எனவே இது அன்பு என்னும் பெரிய பொருளில் சேரமாட்டாது. "எவ் வித பிரதிப் பிரயோஜனத்தைபும் எப்போதும் எதிர் பாராமல் எல்லா ஜீவன்களிடத்திலும் பேதமின்றிக் காட்டப்படும் அன்பே "அன்பு" என்னும் அருமையான வாக்கியத்தின் உண்மையான அனுஷ்டானமாகும். இந்த அன்புதான் பெரியதோர் மோக்ஷ வீடாகும். இதுவே "கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி எல்லா வுயிருந் தொழும்" என்ற ஒப்புயர்வற்ற உயர்ந்த தெய்வ

அன்பாகும். இந்த நிலையில் இதர ஜீவராசிகளைக் கொல்லாமலும் பிறரால் கொல்லப்பட்டவற்றை அல்லது விற்கப்பட்டவற்றைத் தின்னாமலும் ஒழிப்பதொன்றே சிறந்த தெய்வபக்தியாம்.

மாரி, காளி, வீரன், முனியன், கருப்பன், இருளன், தொட்டி, முதலிய பல பெயர்களைக்கூறிக் கோழி ஆடு முதலியவற்றைக் கொல்லல், கொல்லுவித்தல், தின்னல், தின்னச்செய்தல், இவற்றிற்கு உடன்பட்டிருத்தல் என்னும் கொலைத் தொழிலும் தெய்வபக்தி என்பதில் சேராமலும், சேர்க்கவிடாமலும் மீளா நரகிற்கே ஆளாக்கும் என்பது சாஸ்திரசம்மதம். இப்படித் தெய்வங்களுக்குப் பலியிடுதல் என்ற பெயரைச் சொல்லியோ, தேகவலுவிற்காகவென்றோ, அல்லது அவை இல்லாவிடில் மேற்சொல்லிய துர்த்தேவதைகளின் கோபமும் அவற்றால் பல வியாதிகளும் உண்டாகின்றனவென்றோ வீண்காரணங்களைச் சொல்லிக்கொண்டு பல ஜீவன்களை வதைசெய்வதால் வாயில்லாஜீவன்கள் அச்சமயம் கதறிப், பதறிப், துடிதுடித்து மனம் பதைத்து, அலறி, ஆவி சோர்ந்து, விம்மிப் பெருமூச்செறிந்து, திடுக்கிட்டு, வேறுவழிகாணாது கடவுளை நோக்கித் தீனசுரத்தோடு கல்லும் கரையும் வண்ணம் அபயமிட்டு, "காப்பாற்றுவார் இல்லையே ஈசா." என்று ஏங்கிக் கண்கலங்கி மீளாத்துயரத்தோடுவிடும் ஒவ்வொரு கண்ணீர்த் துளியும் "வழிவழி யீர்வதோர்வாளாக" நின்று முற்பழிக்குப் பிற்பழியாகப் பலிவாங்குமென்பதே பெரியார்வாக்கு.

"முற்பகல் செய்யிற் பிற்பகல்விளையும்" என்னும் மூதாட்டி வாக்குத் தீதாமா? "தாம் தாம் செய்தவினை தாமே அனுபவிப்பர்" என்பது பொய்ப்பாமா? "எளியாரை வலியார் வதைத்தால் வலியாரைத் தெய்வங்கேட்கும்" என்னும் சிறியமொழி சிதைவாமா? என்பவாதி ஆப்தவாக்கியங்களின்படி அம்மைப்பழி, வாந்திபேதிப் பழி, சந்நிதோஷப்பழி, மாந்தரோகப்பழி, சவலைப்பிள்ளைப்பழி, தேரைவீழற்பழி, எலும்புருக்கிரோகப்பழி, மேகவியாதிப்பழி, சூழ்வினைப்பழி, மலட்டுரோகப்பழி, கருச்சிதைவுப்பழி, கர்ப்பரோகப்பழி, சாவுபிள்ளைப்பழி, பாண்டுரோகப்பழி, கிராணிவகைப்பழி முதலிய பலவாய கொடுவினைகள் யாவும் "ஊனைத்தின்று தன் ஊனைப்

பெருக்கும்" ஜீவ வதையால்—கொலைப்பழியால்—புலாலுண்ணலால்—கோழி, வாத்து முதலியவற்றின் முட்டைகளைத் தின்னலால்—வந்த பழங்கர்ம வினைகளே யெனக் கருணையே வடிவான ஆயுர்வேத வைத்திய சாஸ்திரங்கள் அறை கூவிப் பறை சாற்றுநிற்கும். விபூதி, உருத்திராக்கம், திருமண், துளபமணி முதலிய சைவ வைணவ சின்னங்களை எவ்வளவு மேன்மையாகப் பூண்டாலும், பூசித்தாலும், பஞ்சாக்ஷர அஷ்டாக்ஷர மந்திரங்களைச் சதா பஜித்தாலும், திருவாசகம் திருவாய்மொழிகளை இடைவிடாது பாராயணஞ் செய்தாலும், நாயன்மார் ஆழ்வாராதி பெரியோர்களை நேசித்தாலும், பக்தர்களை பாகவதர்களை விசுவசித்தாலும், மஹேஸ்வர பூஜை ததியாராதனைகளைத் தாராளமாய்ச் செய்தாலும் இவை முதலிய வேஷங்களால் கடவுள் மகிழார்; கருணை செய்யார்; அருள் புரியார்; சிற்றமே கொள்வார்.

பல ஜீவராசிகளை வதைத்து வயிற்றில் திணித்து, அவ்வயிற்றின் மீது விபூதி உருத்திராக்கம் திருமண் துளபமணி இவற்றை அணிந்து கொண்டு இந்தக் கொலைக் களமாகிய வயிற்றை முன்னே அலங்காரமாய்க் காட்டிக் கொண்டு, கைகட்டி, வாய்பொத்தி, மகா பய பக்தி விநயத்துடன் தேவார திருவாசகங்களையும், நாலாயிர திவ்ய பிரபந்தத்தையும் பண்ணிசை மாறாமல் பாடிக்கொண்டு, சந்நிதி முன் நின்று தன்போன்ற மாம்ச பட்சண கூட்டத்தவர் மெச்சும்படி செய்யும் பக்தி தெய்வபக்தியாகாதாதலாலும் உண்மைப் பக்தியால் அடையும் பயன் இப்புலால் பக்தியால் கிட்டாவாதலாலும், "ஜீவ வதையைநீக்கலும், புலாலுண்ணலைப் போக்கலுமே" உண்மைத் தெய்வ பக்தியும் உயரிய சமயாசாரமும் ஆம் என்பதுமே பெரியார் கொள்கை.

"கங்கையிற் படிந்திட்டாலும் கடவுளைப் பூசித்தாலு
மங்குல்போற் கோடி தானம் வள்ளலாய் வழங்கினாலும்
சங்கையில் லாத ஞான தத்துவ முணர்ந்திட்டாலும்
பொங்குறு புலால் புசிப்போன் போய்நர கடைவனன்றே"

அ. வேங்கடாசல முதலியார்,

ஆயுர்வேத வைத்தியர், திருவண்ணாமலை.

வேதவிதி விளக்கம்.

(ஸ்ரீமாந், வ. மு. இரத்திநேச்வர ஐயரவர்கள் தமிழ்ப்பண்டிதர்.)

வேதம் அறிவிப்பதென்று அர்த்தமுடையது. இந்தவேதம் பரமேசுவரனால் அருளிச் செய்யப்பட்டது. வேதத்தில் விசுவாமித்திரர், பரத்துவாசர், கிதசம்மதன், வாமதேவர், அகஸ்தியர், ஆங்கிரசர், ஜமதக்கினி, பிரகஸ்பதி, கண்ணுவர், மதுசந்தனார் முதலிய பல முனிபுங்கவர்கள் ஸ்துதிகளும் சர்ச்சைகளும் காணப்படும். வேதம் பொதுவான நூல். இது இக-பர சாதனங்களைத் தெள்ளிதில் விளக்கும். வியாஸபகவான் வேதத்தை நான்காக வகுத்தார். வி — வேதம்; ஆஸ் — வகுத்தல். இவரை வாதராயண முனிவர் என்பர். வேதாகமாதி சாஸ்திரங்கள் நமது சமயத்திற்கு ஒரு பெரிய பொக்கிஷ சாலையாகவுள்ளன. வேதம் ஒரு சூத்திரம் போன்றது. ஆகமம் பாஷியம் நிகர்த்தது. வேதம் கர்மகாண்டம், உபாசனாகாண்டம், ஞானகாண்டம் என்று பிரிக்கப்பட்டுளது. கர்மகாண்டத்தில், ஆத்மலாப ஏதுவான கர்மாநுஷ்டானங்களைச் செய்யுமுறையும், யாகாதிகள் செய்யுமுறையும், பல சுருதி அட்டவணையும், பிறவுங் காணப்படும். உபாசனாகாண்டத்தில், பரமேசுவர பக்தி விருத்தி விஷயமே சூசிக்கப்படும். ஞானகாண்டத்தில், தத்துவஞான வுணர்ச்சி முக்கியம் என்றும், அதனால் பிர்மஞானம் பெறும் உபாயமும் பிறவும் உரைக்கப்படும். வேதம் ஆரணியகம், பிராம்மணம், சூத்திரம் என்ற பெரும் பிரிவுகளைத் தன்னகத்துட் கொண்டது. தசதி, வல்லி, அநுவாகம் முதலிய உட்பிரிவுகள் பலவுள. தேவாநுக்கிரகம் பெற்ற ஸ்ரீசங்கராசாரியர், வித்தியாரண்யர், மஹீதரர், சாயனர், ஆனந்ததீர்த்தர், ஆனந்தகிரியார், இரங்கராமாநுஜ ஜீயர் முதலியோர்வேத சிரசுகளாகிய உபநிஷத்துக்களுக்குப் பாஷியங்கள் செய்திருக்கின்றார்கள். ஐரோப்பிய பண்டிதர்களால், மொழிபெயர்க்கப் பெற்று அநேக உபநிஷத்துக்கள் வெளிவந்துள்ளன. பெரிய அறிவுள்ள, பர்னல், போலி, மாக்ஸ்முல்லர் கவுல் முதலிய சிலர் வேதோபநிஷதங்களைப் பற்றிப் பலபட ஆங்கிலமொழியில் வரைந்து வெளி

யிட்டதாகத் தெரியவருகிறது. அந்நியதேச மொழிகளில் இன்னும் பலர் பலபட எழுதியதாகவும் அறிகின்றோம். நிற்க,

யாகம் என்னும் பெருவேள்வி முறையைப்பற்றி முன்னே குறிப்பிட்டாம். யஜுர் என்பது ஒருவேதபாகப்பெயர். இதற்கு யாகம் என்பது பொருளாகும். யாஜ்—யாகம்; பலி. பலி என்றவுடன் ஆடு கோழி என்ற வாயில்லாத பிராணிகளைக் கொலை செய்வதாக அபிப்பிராயப்படுதல் கூடாது. யஜுர்வேதத்தில் ஜபதபப் பிராம்மணம் ௧௪-ம் கண்டத்திலே பலிசெலுத்துவதாகக் கொலை செய்வதைக் கண்டிக்கப்பட்டிருப்பதை வியாக்கியானங்களால் அறிகிறோம். ஒருமிருகம் தானகவே மந்திரோச்சாரண சக்தியால் இறக்க வேண்டும்; இறந்த அதே பசு எழவும் வேண்டும். பசு என்பது ஆட்டைக்குறிக்கும் வார்த்தை. யாகப்பசு என்றும் பேர் உண்டு. இந்து மதத் திறத்து ஒன்றாய பௌத்தமே அகிம்சாதர்மத்தை வியந்து கொண்டாடியது. சைவசமயத்திற்கு ஜீவகாருண்யமே மேலான உயிர் நிலையானது. வேதத்தை கெட்டுருப்போடும் போலி வேஷதாரிகள் உண்மையறியார்கள்! பாவம்! பாவம்!! யாகத்தில் பலவித முண்டு. அஸ்வமேதம் புருஷமேதமும் யாகங்களே. புருஷரை ஏன் கொலை செய்ய ஒரு தீக்ஷிதர்களும் முன் வரவில்லை? அரசினர்க்கஞ்சிப் போலும்! அன்றி வாய் பேசாத நிரபராதிகளான மிருகங்களை வதைப்பதைக் கேட்க யாருமில்லை என்ற துணிவே யென்க. இந்த மனிதர்கள் சற்று நிதானித்துக் கருணையை வளர்ப்பார்களாக. அசுவமேதத்தில் ௬௱௯-குதிரைகளையும், பசுக்கள் பக்ஷிகள் முதலிய வற்றையும் இருபத்தொரு யாகஸ்தம்பங்களில் கட்டியும், சாதுவான மற்றைய வீட்டு மிருகங்களை மத்தியில் கல்லுத்தூண்களில் கட்டியும்; புருஷமேதத்தில் ௧௧௮௫ புருஷரை ௧௧-யாகஸ்தம்பங்களில் கட்டியும் நாராயண பலி மந்திரங்களைக் கூறிப் பிறிது ஒரு உபத்திரவமுஞ் செய்யாது அவிழ்த்து விடும்படி விதிக்கப் பெற்றிருக்கின்றமையறிக. வியாக்கியாதாக்களால் ஸ்பஷ்டமாக விளக்கப் பட்டிருக்கும் இவ்விஷயங்களை, ஒப்புக் கொள்ளாத பாவிகளுக்கு நாம் யாது சொல்லுவோம்!

"போற்றிடு நம்மைப் பூசை புரிவதே கருமம்; வேள்வி
யாற்றிடல் கரும மன்ருல் அகத்திடை நம்மை முன்னி
நோற்று மெய்வாட்ட ருனே தவம். சிலநூல்கள் தம்முள்
சாற்றிட வியற்று சாந்திராயணம், தவம தன்றே.

—வாயு சங்கிதை.

அசுவமாகிய விராட்டுக்குக் காலைப்பொழுது சிரசு என்றும், சூரியன் கண்ணென்றும், சந்திரன் காது என்றும் உருவகப்படுத்தி யசுர் வேதத்தைச் சார்ந்த தைத்திரியங் கூறும். பூதார்த்த வாதம், குணார்த்தவாதம் என்று வேத வாக்கியார்த்தங்கள் இருவகைப் படும். நிற்க, கந்தபுராணத்தில்,

புன்மையாம் பசுத்தடிந்து புரையில் வேள்வி யாற்றியே
தொன்மைபோ லெழுப்புமாறு சுருதிசொற்ற வாறுபோல்
மன்மதன்றனைப் படுத்து மாதைவேட்டு மற்றதன்
பின்முறைக்க ணல்கவெம்பி ரானினைந்த னன்கொலாம்.

என்னுஞ் செய்யுள் கவனிக்கத் தக்கது. இதனால், முன் யுகங்களில் கொலைசெய்தவை எழுப்பப்பெற்றுவந்தன என்பது பெறப்படுகின்றது. எழுப்பாமை பாவம் என்பது மறிக. "இந்தக் கலியுகத்தில் கொன்ற பசுக்களை எழுப்பமுடியாமைபற்றி யாகஞ் செய்தல் விலக்கப்பட்டது" என்பது சிந்திப்பிற் குரியதாம்.

பொன்னனையாள்.

(வாகீசபக்தன் எழுதியது.)

இம்மின்னனாள் நமது பாண்டி நன்னாட்டிலுள்ள, "திருப் பூவணம்" எனுந் திருத்தலத்தில் வாசஞ் செய்து கொண்டிருந்த ஒரு உயரிய உருத்திர கணிகையர் திலகம். இவள் சிவபெருமா னிடத்தும் சிவனடியாரிடத்தும் அளவிலா அன்புடையவள். ஆடல் பாடல்களில் தேர்ந்தவள். அறநெறி வழிச் செல்பவள். மற்றும் தினந்தோறும் அதிகாலையில் எழுந்து, ஸ்நானஞ் செய்து, சிவபெருமானை ஆன்மார்த்தமாகப் பூசித்துப், பின்னர் திருக்கோயிலை அடைந்து, தேவதேவனை வணங்கிச், சுத்தநிருத்தம் ஆடித்,

திரும்பி வந்து, சிவனடியார்களைச் சிவபெருமானாகப் பாவித்துப், பூசை செய்து, திருவமுது செய்விப்பாள். இவ்வாறு இருக்கும் நாளில் சிவபெருமான் திருவருட்பெருக்கத்தால், அவ்வண்ணல் திருவுருவத்தைப் பொன்னினுற் செய எண்ணி, அதற்குக் கருக்கட்டினாள். ஆனால் அவளுடைய வருவாய் முழுவதும் சிவனடியார்களுக்குத் திருவமுது செய்யுந் திருப்பணிக்கே போதியனவாயின. அதனால் பொன்னினால் இறைசிவன் திருவுருக்காணப் பொருள் மிக்க இயலாதவளாய், வருந்தி வாட்டமுற் றிருந்தாள். அதனை அறிந்த சிவபெருமான், ஒரு சித்தவேடந் தாங்கி, அவள் வீட்டிற்குத் திருவமுது செயவரும் சிவனடியார் திருக்கூட்டத்துடன் வந்து, திருவமுது செய்யாது புறத்தே இருந்தார். அச்சிவனடியார்கள் எல்லோரும் திருவமுது செய்தகன்ற பின்னர், பொன்னனையாருடைய பணிப்பெண்டிர், புறத்தே சித்தராய்ச் சிறந்து இருந்த சிவனடியாரை அமுதுசெய அழைத்தனர். அதற்கு அவர், "உங்கள் பொன்னனையாளை இங்கே அழையுங்கள்." என்றனர். அவ்வாறே, பொன்னனையாரும் போந்து, அவரை வணங்கித், திருவமுது செயவேண்டி நின்றனள். அவளைப் பார்த்துச் சித்தர், "போமருடைய உன்னுடல் இளைத்திருப்பதின் காரணம் என்ன?" என்றார். அதற்கு அவள் அவருடைய திருவடியில் வீழ்ந்து தாழ்ந்து, "எம்பெருமானே! எளியேனுக்கு வேறு ஒரு குறையுமில்லை. சிவபெருமானுடைய திருவிக்கிரகத்தைப் பொன்னினுற் கண்டுகளிக்க விழைந்து, கருக்கட்டி வைத்திருக்கின்றேன். ஆனால், எனது வருவாய் முழுவதும் மாகேசுவர பூசைச் செலவிற்கே சரியாய்ப் போகின்றது. சிறிதும் எஞ்சுகின்றதில்லை." என்றாள். அதனைச்செவிமடுத்த சித்தர், "பெண்ணே! நீ, 'உனது உடலும், பொருளும், இளமையும், அழகும் நிலையிலாதன; தருமமே நிலையுள்ளது.' எனத்தெளிந்து, அதனைச் செய்கின்றாய்! அதனால் ஈறிலா இன்பம் எய்தினை. "பொன்னனையாள்" எனும் உனது பெயருக்கு ஏற்ப, எல்லாம் வல்ல இறைவன் திருவுருவத்தையும் பொன்னினுற் கண்டு களிப்பாயாக. உன் வீட்டிலுள்ள ஈயம், செம்பு, இரும்பு, வெள்ளி, பித்தளை, வெண்கலம், தரா முதலிய உலோகங்களாற் செய்யப்பெற்ற, பாத்திரங்களைக் கொணர்க."

என்றனர். அவ்வாறே அவளும் அவைகளைக் கொணர்ந்து அவர் திருமுன்னர் வைத்தனள். அவர் அவைகளின்மேல் தமது திருநீற்றை அள்ளித் தெளித்து, அவளைப் பார்த்து, "இவைகளை நீ இன்றிரவு நெருப்பிலிட்டு எடுத்தால் யாவும் பொன்னாம். அப்பொன்னைக்கொண்டு அத்தன் திருவடிவங் காண்க." என்றனர். அப்பொழுது அவள், அவரை அங்கு அன்றிரவு தங்கித் திருவமுது செய்து, அதனை முடித்துவிட்டுக் காலையிற் செல்ல வேண்டினள். அதற்கு, அங்கயற்கணாளைவிட்டு அகலாத அண்ணலார் "மதுரையிற் சித்தர் யாம்." என்று மறைந்து போயினார். அவ்வாறு சித்தராய் வந்த சிவபெருமான் மறைந்தது கண்ட பொன்னனையாள், மறைந்ததால் சிறிது மனத்தளர்ச்சியும், கவலை நீங்கப் பெற்றதால் பெருமகிழ்ச்சியும் கொண்டனள். பின்னர், அவைகளை நெருப்பிலிட்டனள். அவையாவும் பொன்னாயின. அப்பொன்னைக்கொண்டு, சிவபெருமான் திருவடிவத்தைக் கண்டனள். அத்திருவிக்கிரகத்தின் அழகிய வடிவத்தைக் கண்டு, "அழகிய பிரானோ?" என்று அள்ளி முத்தங் கொஞ்சினாள். புதிதாக அப்பொழுது வார்க்கப்பெற்ற உருவத்தில், அவள் முத்தங் கொஞ்சியதால் அதன் கபோலத்தில், அவளுடைய நகக்குறிகள் பதியப் பெற்றன. அவள், "அழகிய பிரானோ?" என்று அழைத்த காரணத்தால், அத்தலத்தில் சுவாமியின் பெயர், "அழகிய நாயகர்." என வழங்குகிறது. பிறகு அவள் அத்திருவிக்கிரகத்தைத் திருக்கோயிலில் பிரதிஷ்டை செய்து, நித்திய நைமித்திகங்களைச் சரிவர நடாத்திச், சின்னாட்கள்சென்றபின்னர் சிவபதம்பெற்றனள்.

இப்பொன்னனையாள், மிக விழுமிதாகிய, "விருந்தோம்பல்." எனும் தருமத்தை இடைவிடாது நடாத்திப், பகர்தற்கரிய பயன் பெற்றதைச் சிறப்பித்து, மாதவச் சிவஞான யோகிகள் பின் வரூஉம் வெண்பாவைப் பகர்ந்திருக்கின்றார்கள்.

பொன்னனையா ளன்பருக்கே போனகமீந் தன்னருளாற்
சொன்னமிகப் பெற்றாளே சோமேசா—பன்னில்
வருவிருந்து வைகலு மோம்புவான் வாழ்க்கை
பருவந்து பாழ்படுத லின்று. —சோமேசர்முதுமொழிவெண்பா.

அத்திருப்பூவணம் எனும் திருத்தலத்தில், பொன்னனையாள் பெயரால், "பொன்னனையாள்மடம்; பொன்னனையாள் மண்டபம்." என இரண்டு கட்டிடங்கள் உள்ளன.

பெட்ரோல்.

மேற்கிந்திய மோட்டார் வியாபாரச் சங்கத்து விளம்பரசபையார், இத்தேசத்தில் பெட்ரோலின் அதிகவிலையை உத்தேசித்தும் மோட்டார்வண்டிச் சொந்தக்காரர்களின் நன்மை கருதியும் கீழ் வரும் துண்டுப்பிரசுரத்தை வெளியிட்டிருக்கிறார்கள்.

நான்கு கோடி ரூபாய்கள் இந்தியா கவர்ன்
மெண்டாரால்வீசி எறியப் பெறுகின்றன.
பொறுக்கமுடியாத நிலைமை.

"இவை உண்மைகளே; கட்டுக்கதையல்ல."

(க) இந்திய அரசாங்கத்தார், கக௲கஎ-ம் வருஷத்தில், இந்தியாவிலும் பர்மாவிலும் உண்டாக்கப்படுகிற எல்லா மோட்டார் ஸ்பிரிட்டின் பேரிலும் ஒருகாலனுக்கு ஆறணாத் தீர்வை செலுத்தும்படி சட்டம் செய்தார்கள்.

(உ) இந்தியாவிலும் பர்மாவிலும் செலவழிக்கப்படுகிற பெட்ரோலுக்கு இன்னும் அந்தச் சட்டமே நடந்துவருகிறது.

(ங) ஆனால், அன்னிய நாடுகட்கு ஏற்றுமதி செய்யப்பெறும் பெட்ரோல்களுக்குத் தீர்வை விதிக்கப்படவே இல்லை—சபையுடன் கூடிய ராஜப் பிரதிநிதியவர்கள் அந்த வரியிலிருந்து பெட்ரோல் ஏற்றுமதியை நீக்கியிருக்கிறார்.

(ச) ஷை சட்டம் ஆக்கப்பட்டதிலிருந்து பர்மாவானது அன்னிய நாடுகட்கு, இதுவரையில கஉ-கோடிகாலன் பெட்ரோல் ஏற்றுமதி செய்திருக்கின்றது.

(ரு) இந்த ஏற்றுமதிகட்கு ஷை சட்டப்படி தீர்வை வாங்கியிருக்குமானால், சஉ கோடி ரூபாய்கள்வரியாகப்பெற்றிருக்கலாம்"

குறிப்பு:—(க) பர்மாவில் ஏற்றுமதி செய்யப்பெறும் பெட்ரோலுக்கு, அரசாங்க உத்யோகஸ்தரால் மேற்பார்வையிடப்பெற்று,

அந்தக் கம்பெனியாராலேயே ஒரு காலனுக்கு ௪௨-அணு தான் மதிப்பிடப்படுகிறது; ஆனால் பம்பாய் மோட்டார் வியாபாரிகள் அதே பெட்ரோலுக்கு ஒரு காலனுக்கு இரண்டு ரூபாய் விலை சொல்கிறார்கள். அரசாங்கத்தார் இவ்விஷயத்தில் செயலற்று மௌனம் சாதிக்கின்றார்கள்.

(௨) அரசாங்கமானது, தனது இச்சையின் முடிவாக அதிகவரியைப்பெறுவதற்காக மோட்டார் வண்டிகளின் பேரிலும் அவற்றின் சாமான்களின்பேரிலும், நூற்றுக்கு ௩௦-வீதம் இறக்குமதித்தீர்வை விதித்திருக்கிறது. அதிக வரி சுமார் ரூ. ௨௫-லட்சம் இவ்வருஷம் கிடைத்துவிடுமென்று உத்தேசித்திருக்கும்போதும். ஆனால், இந்த ஐந்துமாதங்களில் கிடைத்தது அதிக வரியாக ரூ. ௧௨-லட்சம்தான்.

இதைப்பற்றி இண்டியன் அண்டு ஈஸ்டர்ன் மோட்டார் என்னும் ஆங்கிலப்பத்திரிகை பின்வருமாறு தன்னுடைய அபிப்பிராயத்தை எழுதுகிறது:—

அரசாங்கம், இவ்விதம் பெருத்த மோட்டார் எண்ணெய் வியாபாரிகளிடம் ௪௨-கோடி ரூபாயைக் கொட்டிக்கொடுத்துவிட்டு இந்தியாவிலுள்ள மோட்டார்வண்டி வியாபாரிகளிடமிருந்து அபஹரிக்க உத்தேசித்திருக்கிறது. சென்ற ரு-வருஷங்களாக ௪௨-கோடி ரூபாய் நஷ்டமடைந்த இந்தியா நிர்வாணப்படுத்தப்பட்டிருக்கும் நிலைமையானது, இந்தியாவுக்கு அபகீர்த்தியேயாகும். இந்த அவசியமான வரும்படியைக் கையிழந்ததன்மைக்கு அரசாங்கம் கொடுக்கும் சிலேஷையான காரணமானது மிகவும் திருப்தியற்றதாக இருக்கின்றது. இன்னும், ௧௯௧௭-வருஷம் ஏற்பட்ட சட்டப்படி அந்நியநாட்டுக்கு ஏற்றுமதியாகும் பெட்ரோல் எண்ணெய்களின்மேல் தீர்வைவிதிக்காது ஒதுக்கினதற்குச் சொல்லும் காரணமானது மிகவும் வேடிக்கை. என்னவெனில் இந்தியாவிலிருந்து ஏற்றுமதிசெய்யப்படும் இந்தச்சரக்கானது அந்நிய நாடுகளிலிருக்கும் அந்தச்சரக்குகளுடன் போட்டியில் சமதளத்தில் நிற்கவேண்டுமென்றே இப்படி இதன்மேல் தீர்வையை நீக்கினோமென்று சொல்கிறது. இன்னும், அரசாங்கமானது அரிசி தேயிலை

தோல்கள் முதலிய சாமான்களின் பேரில் தீர்வை விதித்துத் தானிருக்கிறது. அவைகள் அன்னியநாட்டுக் கடைத்தெருப்போட்டியில் சமமிலேயிருக்கவேண்டுமேயென்றெண்ணாமல், இந்த பெட்ரோலுக்கு மாத்திரம்தான் பூர்ண விலக்கை நினைத்ததோ? இந்தப் பெட்ரோலும் அந்தக் கடைக்காரர்களினாலேயே, ஏற்றுமதி செய்யப்படுமிடங்களில் ஒருகாலனுக்கு ௧௨-அணாவெவிலையேற்படுத்தப்பட்டிருக்கின்றது. இந்த விலைப்படி ஏற்றுமதியாகும்போது அந்நிய நாட்டுக்கடைத்தெருவின் போட்டிக்கு யாதொருபாதகமும் ஏற்படாமலே இந்தச் சரக்கில் ஏராளமானதீர்வை விதிக்கப்படலாமே. ஏனெனில் அமெரிக்காவில் இந்தச் சரக்கு ஒரு காலனுக்கு இரண்டு ஷில்லிங் அல்லது ௧௨-ரூபாய் விலையாக இருக்கிறது. இங்கு வாங்கும்விலை ௧௨-அணா; அங்கு விற்கும் விலை ௧௨-ரூபாய்.

இந்தியாவில் மோட்டார்வைத்திருக்கும் சொந்தக்காரர்கள் வேண்டுமென்றே அரசாங்கத்தாரால் நஷ்டத்துக்குத் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கவேண்டும். அல்லது எண்ணெய் வியாபாரிகளை அரசாங்கம்மிகவும் பக்ஷத்துடன் இருதயத்தின் ஒருமூலையில்வைத்திருக்கவேண்டுமென்று சாதாரணமனிதருக்குத் தோன்றக்கூடும். அரசாங்கமோ மோட்டார் வண்டி இறக்குமதியிலிருந்து வருஷத்துக்கு அதிகவரும்படியாக ௨௫-லட்சம் ரூபாய் பெறுவதற்காகவேண்டிய ஒரு அற்பமுயற்சியில் மோட்டார்த்தொழிலைத் திக்கு முக்காடச் செய்து ௧௯௧௭-வது சட்டப்படி பெட்ரோலில் ஏற்றுமதித் தீர்வையில் வசூலிக்கவேண்டிய தொகையில் வருஷத்துக்கு சுமார் ௮௦-லக்ஷம் ரூபாயை எறிந்து விட்டுக்கிடக்கிறது.

பர்மாவிலிருந்து ஏற்றுமதிசெய்யும் பெட்ரோல் எண்ணெய் வியாபாரிகள் தாங்களே ஒரு காலனுக்கு சாதாரணமாய் ௧௨-அணா விலையாக ஏற்படுத்தி யிருக்கிறார்கள் என்பது பொதுஜனங்கட்கு வெளிப்படையாகும். இந்த விலையானது அதே பெட்ரோல் பர்மாவிலிருந்து இந்தியாவிலிறக்குமதியாகும்போது அதே எண்ணெய்,வியாபாரிகட்கு ஆச்சரியமான ஒரு வேற்றுமையைக் காட்டுமென்பதில் ஐயமில்லை. ஏனென்றால் இந்தவிலை இறக்குமதியாகும்போது ஒரு காலனுக்கு ஒரு ரூபாய் பத்தணாவாக ஆகிறது

இந்தியப் பொதுஜனங்கள், "இந்தியாவிலிருந்து அந்நிய நாடுகட்கு ஏற்றுமதியாகும் பெட்ரோலினாலுண்டாகும் லாபத்தை யடைவது யார்?" என்று ஒரு கிரமமான கேள்வியைக் கேட்கக்கூடும். மறுமொழியானது என்னவென்றால் இந்தியப் பொதுஜனங்கட்கும் இல்லை! இந்திய அரசாங்கத்துக்கும் சிறிதுமில்லை என்பதே. ஏனெனில் ஏற்றுமதிப் பெட்ரோலுக்குத்தான் அந்நிய நாட்டுக்குத் தீர்வையில்லையே. ஆனால் எண்ணெய் வியாபாரச் சாலைகளும் அவற்றின் பங்குக்காரர்களும் தாம் இந்தப் பெருத்த லாபம் அடையக் கூடிய அதிர்ஷ்டசாலிகள்.

எம்மதத்தோர்க்கும் சம்மதப் பிரார்த்தனை.

(பண்டித ம. கோபால கிருஷ்ணய்யர் அவர்கள்.)

[இது Alexander Pope என்ற ஆங்கில கவி இயற்றிய, "The Universal Prayer" என்பதன் நேர் மொழிபெயர்ப்பு.]

காலமொரு மூன்றினிலும் காசினியில் எவ்விடத்தும்
சிலர், அறிவிலிகள், தெள்ளறிஞர்—"மூல
சுயம்புவே! சம்போ! சுவாமி!" என இவ்வா
றியம்பித் தொழும் எந்தையே! (௧)

[மூல சுயம்பு = Jehovah = self born; சம்பு = Jove = Giver of Happiness]

"நல்லோனாய் நீஉள்ளாய்; நான்எனிலோ ஞானக்கண்
இல்லா தவன்" என்றே யான் உணர—வல்லானும்
போதமே எற்களித்தாய்; புந்திதனுக் கெட்டாத
ஆதி பெருங்கா ரணா! (௨)

[போதம் = அறிவு; எற்களித்தாய் = எனக்குத் தந்தருளினாய்]

என்றாலும், இந்த இருளுலகில் நீயதினை
நன்(று) இதெனை நான்காண நல்கினாய்—என்றும்நீ
ஒக்க இயற்கையையாழ்க் குட்பிணித்தாய், மாந்தருளம்
மிக்க சுவேச்சையுற விட்டு. (௩)

ஆயா தொருகொடியில் ஆற்றியபா வச்செயல்கள்
ஓயாக் கொதிநரகுக் குய்த்திடுமோ? — ஆயுங்கால்
என்னே! இயற்கை எழுப்புவன அவ்இயற்கை
முன்னோற்குக் குற்றமா மோ? (௪)

[இயற்கை முன்னோற்கு = இயற்கை முதல்வனாகிய ஒரு பெருங் கடவுளுக்கு]

"செய்க"என என்னெஞ்சம் செப்புவன, "முத்தியினும்
உய்க்கிச(து)" என்னும் உணர்வுறுத்தும்—"செய்யற்க"
என்னு(ம்)அதன் எச்சரிக்கை, எற்காக்கும் கும்பியிற்புன்
வன்னெறியிற் செல்லா வகை. (௫)

[எற்காக்கும்-என்னைக்காக்கும்; கும்பியிற்புன் வன்னெறியில்-நரகத்தினும் கேவலமான கொடிய பாப மார்க்கத்தில்]

நல்ல உதாரன்நீ நல்கு நலங்களையான்
அல்வழியிற் போக்கா தருளுவாய்—சொல்லுங்கால்
ஈசனுக்குச் செய்கைம்மா(று), ஈந்தஅவன் ஏவியவா(று)
ஆசறவே துய்த்திடுக லாம். (௬)

[நல்கு-கொடுத்தருளிய; ஈந்த—கடவுள் அருளியவற்றை; ஆசற—குற்றமற; ஏவிய வழியில்; துய்த்திடுதல்-அநுபவித்தல்.]

வாய்ந்தசான் மன்னுலகில் மட்டுமின்றி யான்செல்லப்
போதுழிஎல் லாம்துணையாப் போந்தருள்வாய் சூழ்ந்தஉல(கு)
எண்ஆ யிரமால்,'நீ ஈசன் நரர்க்கே'யென்
றெண்ணு திருந்திடுக யான். (௭)

[போதுழி-புகுமிடம்; போகுமிடம்; எண் ஆயிரமால்—நினைக்கத்தக்க ஆயிரக்கணக்கானவைகளாதலின்]

வன்பும் பகுத்தறிவும் வாயாஎன் புன்மையால்
உன்பே ரிடிவீழ்த்த உன்னுதும்—'நின் பகை ஊர்'
என்னபான் தீர்க்கும் இடந்தொறம் 'நிர் மூலம் உற'
என்றுதம் யான்இ நுக்க வே. (அ)

[வன்பு-வலிமை; வாயா-பெற்றிராத; உன்னுதும்-எண்ணுமலும்; பகை ஊர்-பகைவர் வாழும் ஊர்; தீர்க்கும்-தீர்மானித்து விடும்.]

நன்னெறியி லேநான் நடப்பேனேல், என்றுமெனை
அந்நெறியே நிற்க அருளுவாய்—வன்னெறிக்கண்
நான்நடப்பே னாயின்,அந் நன்னெறிகாண் பான்சிந்தைக்
கான அறிவுறுத்து வாய். (௯)

நற்குணத்தின் நீநல்கும் நன்மைஎணிப் பேய்ச்செருக்கே
உற்றிடா வண்ணமெனை ஓம்புவாய்—முற்றுணர்நீ
தாராத துன்னித் தகவில் மனக்குறைவும்
வாராதெற் காத்தருளு வாய். (௧0)

[நற்குணத்தின்-உனது நல்லகுணம் காரணமாக; ஓம்பு-காப்பாற்றியருள்; உன்னி-நினைத்து; தகவில்-பொருந்தாத: பக்தியீனமான; எற்காத்து-என்னைக்காத்து]

பிறர்துயரம் யான்உணரும் பெற்றியும்,யான் காணும்
சிறுமைபுறங் காக்கும் திறனும்—உறஉணர்த்தி
யான்எவர்க்கும் காட்டுகின்ற இன்னருளே நீஏழை
யேன்எனக்கும் காட்டியரு ளே. (௧௧)

[பெற்றி-தன்மை; புறங்காக்கும்-மறைக்கும்; உற உணர்த்தி-அடையும்படி அறிவு அளித்திடே.]

ஈனனே யான்எனினும் எற்காவி ஈந்தோன்நீ
ஆனதின்ஈ னன்முற்றும் ஆகேன்யான்—யான்நுகரும்
இன்றுறுவாழ் விற்,சாவில் யான்செல் இடந்தோறும்
மன்றவழி காட்டியருள் வந்து. (௧௨)

[நுகரும்-அநுபவிக்கும்; மன்ற நிச்சயமாக; (அசையும் ஆம்).]

உச்சி வனமும் உளத்தெளிவும் இன்றெனக்கு
வைச்சிடுக. ஆதவன்கீழ் வாய்ந்துள்ள—மிச்சமெலாம்
நல்கினும்நல் காய்எனினும் நான்வேண் டுவதுஇவை
செல்லுகநின் சித்தத் திறம். (௧௩)

[உச்சிவனம்-வயிற்றுப் பிழைப்பிற்கானவை; வைச்சிடுக-வைத்திடுக; ஆதவன்-சூரியன்.]

எண்ணுமிடம் யாவையுமே எழில்மிக்க ஆலயமாய்
விண்மண்ணே வேலையிளே வேதிகையாய்—நண்ணும் உனக்(கு)
எவ்வுயிரும் பல்லாண் டிசைக்க; எமதிபற்கைத்
இவ்வாதுங் காபத் திரள். (௧௪)

[வேலை-சமுத்திரம்; வேதிகை-பலிபீடம்; நண்ணும்-விரும்பிக் கொண்டுள; இசைக்க-கூறி வாழ்த்துக.]

குட்டிவதைக்காகத் தாயினம் இரங்கல்.

(சென்னை ஸ்ரீமாந், திரு. வி. உலகநாதமுதலியார் அவர்கள் இயற்றியது.)

தாயிடு சாபம்.

கலிவிருத்துறை.

நாடுறு சுற்றம் மாடில தாக நைந்தேங்கும்
ஆடுறு குட்டி வாடிட வெட்ட அரிவாள்தான்
நீடுற வேந்தி நேருற வந்த நிசிபோல்வார்
தேடுற மண்ணில் செங்கர நீங்கித் திரிவாரே. (௧)

தாய் அறிவுறுத்தல்.

ஆசிரிய விருத்தம்.

குட்டிவெட்டுப் பொங்கலெனக் கொண்டாடும்
மானிடரே கூறக் கேளீர்
கட்டிடனே நும்மக்கள் கத்தியினால்
வெட்டுண்டால் கதறிச் சென்று
முட்டியவர் தலைவாங்க வழக்கிட்டுத்
தூக்கிடுவீர் முதிய ஆட்டுக்
குட்டிகளைக் கழுத்தறுப்பீர் தூக்கிலுமை
யாரிடுவார் கூர்ந்து பாரீர். (௨)

ஆடுபன்றி கோழிகளை யழிப்பதற்குச்
சாத்திரங்கள் அறைவ துண்டோ?
கேடுறுவீர் சொன்னாலும் கேட்பதில்லை
வழக்கமெனக் கெடுவீ ரந்தோ
காடுலவு முயிர்வதைதான் வீண்போமோ?
உம்முயிரைக் கால தூதர்
கூடுவாள் கொடுவீசி முடியிடறச்
செய்வரென நவிலு நாலே. (௩)

"கொல்லாமை யெத்தனையோ குணக்கேட்டை
நீக்கு"மெனக் கூறிப் போந்த
நல்லார்தம் ஞானவுரை கேளாது
புண்ணியர்போல் நடிப்பில் தேர்ந்த
கல்லாத கன்னெஞ்சப் பூசாரி
மொழிகேட்டுக் கருணை யின்றிப்
பொல்லாநும் பாழ்மனமும் பதையாது
பல்லுயிர்கொல் பாவம் போமோ. (௪)

தாய் ஈசனை நினைந்து வருந்தல்.

என்னபவம் நாமிழைத்தோம்! எக்குழவி
யுயிர்வதைத்தோம் ஏழை மாந்தர்
நன்னயமார் நம்மக்கள் உயிர்வாங்க
நயந்ததுவும் ஞாயந் தானோ?
கன்னியொரு பங்குடைய காவலனே!
கறைக்கண்டா! காவா போமின்
வன்னிவிழி வந்தவனைச் சுமந்தகொடி
யாய்நின்ற வரந்தா னீதோ. (௫)

மனமொழிமெய் மூன்றாலும் மாசிழையா
மைந்தருயிர் மாய்த்திட் டோர்தம்
கனப்பெருக்கம் அழியாதோ சாமி!
துணைநிற்பாயோ? தாயா மெங்கள்
சினப்பெருக்கஞ் சாராதோ பெற்றவயி
றெரிபாவஞ் சிதைந்து போமோ?
புனக்கொடிபா கத்துறையுங் குமரா!நின்
துணையன்றிப் புகுவ தெங்கே. (௬)

சதங்கை யொலி.

பொன்னுரைகள்.

சென்ற தைமீ கஉ சிறுவயல் சரஸ்வதி வித்தியாசாலையின் புதிய கட்டடத்திறப்புவிழா, ஸ்ரீ வ. வெ. ஸா. ஐயரவர்கள் தலைமையில் நடைபெற்றது. அப்பொழுது ஐயரவர்கள் சரஸ்வதியைப்பற்றி ஒரு அரிய பிரசங்கம் செய்தார்கள். அதில் அவர்கள் பேசும்பொழுது, “தனிகர்கள் தமக்குப் பெயர் வரவேண்டும் என்று எண்ணி, அதிகாரிகட்கு ஆட்பட்டு, நகரங்களில் டாம்பீகமாகத் தருமம் செய்கிறார்கள். அது தருமம் ஆகாது. நமக்கு அடுத்த தலைமுறையைக் காப்பாற்றக்கூடியபடி பிள்ளைகளுக்கு வித்தையைக்கற்றுக் கொடுப்பதே தருமமாகும்” என்று தற்காலத்திற்கேற்ற தருமத்தின் தன்மையைப்பற்றி உரைத்தார்கள். இப்பொன்னுரைகளைக் கிராமவாசிகள் யாவரும் நன்கு கவனித்துத் தத்தம் கிராமங்களில் நல்ல தமிழ்க் கலாசாலைகளை நிறுவப் பிரயத்தனஞ் செய்வார்களாக.

சிறந்த தீர்மானம்.

திருவண்ணாமலையை அடுத்துள்ள சாணிப்பூண்டி யென்னும் கிராமத்தில் அங்காளம்மனுக்கு உயிர்ப்பலியிடுவது வழக்கம். அது சில அன்பர்களின் முயற்சியால் சென்ற ஆண்டில் நிறுத்தப்பட்டது. இவ் வருஷம் சிவராத்திரியின் மறுதினத்தில் மேற்படியூர் மயானத்தில் சுவாமிக்கு முன்னிலையில் பல உபந்நியாசங்கள் நடைபெற்றன. அவ்விடத்திலேயே பல அன்பர்கள் தாங்களும் தங்கள் வம்சத்தினரும் இனிமேல் புலாலுண்பதில்லை யென்றும் மது வுண்பதில்லை யென்றும் சத்தியஞ்செய்து கையொப்பமிட்டிருக்கின்றனர். இவற்றிற் கிணங்கிய மேற்படி கோவில் தரும கருத்தர் ஸ்ரீமாந், பூங்காவனச்செட்டியாரவர்கட்கும் மற்ற அன்பர்கட்கும் நன்றி செலுத்துவதாக ஸ்ரீ திருஞானசம்பந்த சுவாமிகள் சங்கத்தார் அறிவிக்கிறார்கள். இது நல்ல தீர்மானமாகும். இப்படியே ஆங்காங்குள்ள அன்பர்கள் முயலல்வேண்டும்; வீணாகப்பயங்கொள்ள வேண்டுவதில்லை. மேற்படி தருமகர்த்தர் செட்டியாரவர்களைப்போல ஏனைய தருமகர்த்தர்களும் காருண்யவழியில் நடத்தல் வேண்டுமென்று விரும்புகிறோம்.

எளிதில் கிடைக்கும்.

திருநெல்வேலி ஜில்லா போர்டாரால் போடப்பெற்றுள்ள திருநெல்வேலி—திருச்செந்தூர் ரயில்மார்க்கம் நாளிது மாசி-௴ ௧௧௨ மேன்மைதங்கிய சென்னை கவர்னர் அவர்களால் திறக்கப் பெற்றது. நாளிது ௧௪-ம் தேதியிலிருந்து பொது ஜனங்களுக்குப் பிரயாணி வண்டிகள் விடப்பெறுகின்றன. ௨௪௨ திருநாள் ஆரம்பமாகி நடைபெறுகின்றது. ௨௭௨ விழா மிக விசேடம். திருச்செந்தில் முருகவேளைத் தெரிசிக்க விரும்புவோர்க்கு முன்போல் மோட்டார் வண்டித்தொல்லைகளால் இனிக் கஷ்டப்பட வேண்டியதில்லை. எல்லோருக்கும் எளிதில் எம்பெருமானுடைய தெரிசனம் கிடைக்கும்.

ஹிந்துக்கள் குறைகின்றனரே!

சென்னைமாகாணத்தின் (சுதேச சமஸ்தானங்களைத் தவிர்த்து) ௧௯௨௧ வருஷ கணக்குப்படி ஜனத்தொகை ௪௨,௩௧௮,௯௮௫ ஆகும். இவர்களுள் ஹிந்து மதத்தினரின் தொகை ஆயிரத்துக்கு ௮௮௭-பேர் ஆவர். ஆனால் ௧௮௮௧-ம் வருஷத்தில் ஹிந்துக்களின் தொகை ஆயிரத்துக்கு ௮௮௯-ஆகும். இப்போது இருவர் வீதம் குறைந்திருக்கின்றனர். கிறிஸ்தவர் தொகையோ ௪௰-ம் வருஷத்தில், இருந்த கிறிஸ்தவரின் தொகையைப்போல ஆயிரத்துக்கு நூற்று நாற்பது வீதம் அதிகரித்திருக்கின்றது. கிறிஸ்தவ மதப் பாதிரிமார்களின் பிரசாரவேலை சென்னைமாகாணத்தில் பெருத்த பயனையளித்து வருகிறதென்பதற்கு இதுபோதிய சான்றாகும். ஹிந்துமக்களே! உங்களுடைய அறிவற்ற பூசலை ஒழியுங்கள்! ஒற்றுமை காட்டுங்கள்! உங்கள் மதத்தை வளருங்கள்! நீங்கள் வெளிநாடுகளில் போயிருந்து வேலைசெய்யாவிட்டாலும் இங்குள்ள வர்களையுமா பாதிரிகளுக்கு இரையாக்குதல்வேண்டும்?

ஒழித்து விடுதல் கூடும்.

மத்திய இந்தியாவிலுள்ள போபால் சமஸ்தானத்தின் பீகம் மஹாராணியார், "தம் சமஸ்தானத்தில் மதுபான வகையறுக்களே இருக்கக்கூடாது." என்று கண்டிப்பாக ஒரு உத்திரவு பிறப்பித்துள்ளார். இதனால் அச்சிறியசமஸ்தானத்திற்கு வருஷம் ஒன்றிற்கு ஏற்படக்கூடிய நஷ்டம் நான்கு அல்லது ஐந்து லக்ஷ ரூபாயாகுமாம். இந்த நஷ்டத்தைப் பொருட்படுத்தாது, பிரஜைகளின் நலம் ஒன்றையும், சமஸ்தானத்துப் பொருளாதார நிலை அபிவிருத்தியையுமே மஹாராணியார் பெரிதாக நினைத்துள்ளது போல் மற்ற சமஸ்தானத்தார்களும் நினைத்து மதுவிலக்குச் சட்டங்களை ஏற்படுத்துதல் நலமாகும். பிரிட்டிஷ் இந்தியாவில் காங்கிரஸ் கட்டளையாலும் தொண்டர்களின் பெரு முயற்சியாலும் பெரிதும் குடிநிறுத்தப் பெற்றிருக்கிறது. இன்னுஞ் சில வருஷங்கள் பிரசாரம் மும்முரமாக நடைபெற்றால் பொதுவாக இந்தியாவை விட்டுக் குடிப்பழக்கத்தை ஒழித்து விடுதல் கூடும்.

மோட்டார் வண்டி.

௧௯௨௨-ஞு எப்பிரல் முதல் நவம்பர் வரை (எட்டு மாதங்களில்) இந்தியாவில் ௨௯௯௯ பிரயாணி வண்டிகளும், ௩௨௫ சாமான் ஏற்றிச் செல்லும் வண்டிகளும் இறக்குமதி செய்யப்பெற்றிருக்கின்றன. இந்தக் கணக்குப்படி இறக்குமதியாவது இந்தியாவிற்குப் போதாதென்று மோட்டார் வியாபாரிகள் எண்ணி அதிகமாக இந்தியாவில் விற்பனை செய்ய முயன்று வருகிறார்கள். நமக்குக் கிடைத்துள்ள "இந்தியன் அண்டு ஈஸ்டர்ன் மோட்டார்" என்னும் பத்திரிகையில் ஒரு குறிப்பு வெளியாகியிருக்கின்றது. "இப்போது இந்தியாவில் இறக்கப்படும் மோட்டார்களுக்கு ௧௦௦-க்கு ௩௦ தீர்வை போடப்படுவதை பதினைந்தாக ஆக்கிவிட்டு மோட்டார் சம்பந்தமான டயர் முதலிய சில்லறைப் பகுதிகளின் பேரில் தீர்வையை அதிகப்படுத்திவிடலாமென்றும், அல்லது எவ்வளவு விலையுள்ள மோட்டாரானாலும் ௫௦௦-ரூபா வரியாகப் போட்டு விடலாமென்றும், அல்லது ௧௦௦-க்கு ௫ ஆகத் தீர்வை போட்டு விட்டுப் பிறகு கார்களின் சக்திக்குத் தக்கபடி ஒரு குதிரை சக்திக்கு (Horse Power) ஐந்து ரூபா வீதம் வரியேற்படுத்தி விடலாமென்றும் "வரவு செலவு இலாகா மந்திரி" யோசனை கூறுகிறதைப் பாராட்டி அந்தப் பத்திரிகை பேசுகிறது.

சரித்திரபாடமும் கற்பிக்கும் முறையும்.

"தற்காலம் ஆங்கிலப் பாடசாலைகளில் பல பாடங்களுடன் சரித்திர நூல்களும் பாடமாக வைக்கப்பெற்றிருக்கின்றன. அறிவுணர்ச்சிக்கு இதுவும் அவசியமானதுதானென்பதை யாவரும் மறுத்தலியலாது. ஆனால் அது கற்பிக்கப்பெறும் முறை மாத்திரம் பயனளிக்கக் கூடியதாயில்லையென்று வருந்துகிறோம். அநேகமாக இப்போது கற்பிக்கப்படும் முறையில், சரித்திர பாடங்கள், ராஜிய சம்பந்தமான நிகழ்ச்சிகளை மாத்திரம் தெரிவிக்கக் கூடியனவாயிருக்கின்றன. பழைய காலமுறையாகிலும் சிறிது நலந்தரக் கூடியதாக இருந்தது. ஆனால், நாம் கோருவது என்னவெனில், சரித்திரநூலைப்படித்து வெளிப்போந்த ஒரு மாணவனுக்கு ஒரு நாட்டின் ராஜாங்கமுறை, மதப்போக்கு முறை, தொழின்முறை, இலக்கிய முறை, தத்துவ ஆராய்ச்சி முறை, கல்விமுறை யாதியவற்றின் சரித்திரங்களும் சரிவரத் தெரிந்திருக்கும்படியாக இருத்தல் வேண்டும் என்று மார்கரெட் மஸ்டர்பர்க் என்பவர் கூறுகிறார், இதனை முற்றும் நாம் ஆதரிக்கிறோம். அன்றியும் இம்முறையால் பண்டைய தற்போதைய முறைகளையும் ஒப்பிட்டுப் பார்த்து, "இம்முறை நன்மை பயக்கும்; இம்முறை நன்மை பயவாது" என்று அறிந்து கொள்ளக் கூடிய ஆராய்ச்சித் திறனும் அம்மாணவர்க்கு வாய்க்கும்படி கற்பித்தலே சாலச்சிறந்ததாகும்.

வாழ்த்துகிறோம்.

பர்மாவிலுள்ள தன்னப்பன் நகரத்தார் சென்ற தைமீ ௨௭-௨ ஆந்த நடைபெற்ற விழாவில் குமாரக் கடவுளுடைய அடியாராகிய இடும்பையாவுக்கு ஆடுவெட்டுவதை அறவே நிறுத்திச் சுத்த ஆராதனை செய்தார்கள் என்றறிந்து மகிழ்வு எய்துகிறோம். இவ்வாறே மற்ற ஊர்களிலுள்ள மெய்யன்பர்களும் இடும்பையா பூஜையில் சுத்த ஆராதனையே செய்து சுகமாக வாழ்வார்களென நம்புகின்றோம். ஆடு கோழிகளிடத்து அன்புசெலுத்திய தன்னப்பன் நகரத்தாரை வாழ்த்துகிறோம்.

மலாய்நாட்டில் ரப்பர்.

ரப்பர் விலை சிறிது ஏறி நிற்கிறது. அந்த அரசாங்கத்தார் அதிற் பெரிதும் கவலை செலுத்திவருகின்றனர். சிறு தோட்டங்களில் ஏக்கருக்கு மாதம் ஒன்றுக்குப் பன்னிரண்டுகட்டி (பதினாறு பவுண்டு) எடுத்து விற்கலாமென்று லைசென்ஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது. பெரிய தோட்டங்களில் நூறு மரத்திற்கு அறுபது மரங்களில் பாலெடுத்து விற்கலாமென்றும் விதியிருந்து வருகிறது. இந்த நிலையில் சுமாராக நடைபெறப் பல சௌகரியங்களை ஜனங்கள் செய்துகொள்ளுகிறார்கள். அந்த விஷயத்தில் அரசாங்கத்தார் அதிக நிர்ப்பந்தம் செய்யவில்லை. பால் எடுக்காமல் விடப்பட்டிருக்கிற தோட்டங்களுக்கும் லாபங்கிடைத்துவருகிறது. லைசன்ஸுக்குமேல் சில தோட்டங்களில் பாலெடுக்கப்படுகிறது. அதனையும் வியாபாரிகளும் பாலெடுக்காத தோட்டக்காரர்களும் ௩௦,௩௫ விலைக்கு வாங்கிக்கொள்ளுகிறார்கள். நிற்க, சென்ற ௨௧-ம் ௨௨-ம் வருஷங்களில், பேரா செலாங்கூர் பஹாங் நகிரிசெம்பிலான் என்ற நாலு கவர்ண்மெண்டிலுமிருந்து (F M.S.) வெளியே ஏற்றுமதி செய்யப்பெற்ற விவரம் நமக்குவந்த F. M. S. கெஜட்டில் காணப்படுகிறது. அது வருமாறு:—

		1921 ௵	1922 ௵
பேரா	டன்	32,893,71	50,160,54
செலாங்கூர்	,,	33,439,39	44,835,55
பஹாங்	,,	2,859,24	997,19
நகிரிசெம்பிலான்	,,	16,426,56	24,545,49
ஆகமொத்தம்.		83,756,85	122,459,82

இதனால் முன் வருஷத்தைவிட நடப்பு வருஷத்தில் ௩௮,௭௦௨,௯௭ டன் ரப்பர் ஏற்றுமதி செய்யப்பெற்றிருக்கிறது. ஐரோப்பிய வியாபாரிகள் லண்டன் மார்க்கெட்டில் ரப்பர் மலிந்து போய்விட்டதென்று சொல்லி விலை

ளை மெட்டை யடித்து விட்டனர். பொது ஜனங்களும் ரப்பர்விலை யிறக்கத்தால் பட்டபாடு சொல்லி முடியாது. இவ்வளவு சவுக்கமாகப்போன ரப்பர் மலாய்நாட்டிலிருக்க வேண்டுமல்லவா? ரப்பர் வியாபாரிகளிடமும் கட்டுப்பட்டிருக்கவில்லை. தோட்டக்காரரிடமும் இல்லை. எடுபட்டதும் ஏற்றுமதியானதும் சென்றவருஷத்தைவிட நாற்பதாயிரம் டன் அதிகரித்திருக்கிறது. இடையில் இந்தக் கொள்ளைக்குக் காரணர் யாவர்? ரப்பர் எஸ்டேட்டுகளுக்குச் சொந்தக்காரரான வெள்ளைக்காரர் பலர் இத்தனை கட்டுப்பாடு துன்பங்களைப் பொருட்படுத்தாமல் தாறுவிலைக்குமேலும் ஒப்பந்த மிருப்பதாகச்சொல்லி ஏற்றுமதி செய்துகொண்டே வந்திருக்கின்றன ரென்று அறிகிறோம். பல வழிகளில் போய்க்கொண்டிருந்த ரப்பர் சில எஸ்டேட்களின் மூலமாக இந்த வருஷத்திற் போயிருக்கிறதேயன்றி வேறில்லை யென்பது இப்போது விளங்குகிறது. இனிக் கையிருப்பில் ரப்பர் இல்லை யாதலால் கட்டாயம் விலையேறித்தான் தீரும். போனது போனதுதான். இனிமலாய்நாடு நிலைமிருமென்று நம்புகிறோம். இருபத்தைந்து ஏக்கருக்கு மேல் உள்ள ரப்பர்தோட்டங்களில் முற்றிய மரங்களாகவிருந்தால் முதல் ஐந்து ஏக்கருக்கு ஒரு வருஷத்தில் நானூற்று இருபத்தாறு பவுண்டு பாலும் அதற்குமேலுள்ள ஒவ்வொரு ஏக்கருக்கும் முன்னூற்றிருபது பவுண்டு பாலும் எடுத்துக் கொள்ளலாமென்று திருத்தப்பெற்றிருப்பதாக பின்வந்த F.M.S. கெஜட் அறிவிக்கிறது.

சம்பாவனை.

அமராவதிபுதூர் ஸ்ரீமான், வயி. நாக. ராம. அ. வேங்கடாசலச் செட்டியாரவர்கள் தமது பௌத்ரிக்கு நடைபெற்ற காப்புக்கட்டுப் புதுமையில், நமது குமரனுக்கு ஐந்து ரூபாய் சம்பாவனை செய்து அனுப்பியிருக்கிறார்கள். அவர்களுக்கு நன்றி செலுத்துகிறோம்.

மதிப்புரை.

கர்மயோகம்:-இதொரு இனியபானியமொழிபெயர்ப்பு நூல். சென்னை மயிலாப்பூரிலுள்ள ஸ்ரீராமகிருஷ்ண மடத்தாரால் வெளியிடப்பெற்றது. சுவாமி விவேகானந்தர் அமெரிக்கா தேசத்தில் ஆங்கில மொழியில் உபந்நியாசரூபமாக உரைத்தருளியது. மொழிபெயர்ப்பாசிரியர், ஆங்கிலமும் தமிழும் பாங்குடன் கற்று, பேலூர் ஸ்ரீராமகிருஷ்ண மடத்தாரால், "பிரமசாரிபிரபோத சைதன்யர்" எனும் பெயர் புனையப்பெற்று திருமயிலை ஸ்ரீராமகிருஷ்ண மடத்துத் தொண்டருள் ஒருவராக விளங்கும் பண்டித மயில்வாகனனார்

B. Sc. Lond. அவர். இந்நூல் எட்டு அதிகாரங்களாக வகுக்கப்பெற்றுளது. முதல் அதிகாரமும் மூன்றும் அதிகாரமும் சூத்திர ரூபமாகவுஞ் செய்யப்பெற்றுள்ளன. சூத்திரங்கள் சுவையுடையனவாக இருக்கின்றன.

> "சிறுமதியாளர் பயனுக்குழைப்பர்."
> "மரணம் வரினும் வருக பிறர் நமக்கு
> இன்னா செய்யினுஞ் செய்க யாமவர்க்கு
> இன்பந் தருசெய லென்றும் புரிவோம்
> வஞ்சம் நேரினும் வழிபடல் குறையோம்
> ஆற்றல் சான்ற அறநெறி யிதுவே."

எனும் இரண்டு சூத்திரங்களையும் ஈண்டு தர விரும்புகிறோம். நூலின் முற்பாகத்தில், சுவாமி விவேகானந்தர் திருவுருவப்படமும் இணைக்கப்பெற்றிருக்கின்றது. கிரௌன் ௪௨௪ பக்கங்கள் உள்ளன. விலை அணா ௧௨. "ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் சந்தாதாரர்க்கு அணா ௧௦.

திருத்துடிசைப்புராணம்:—இப்புராணம் ஏட்டுப்பிரதியிலிருந்து புதிதாக அச்சிடப்பெற்று நமது பார்வைக்கு வந்திருக்கிறது. இதன் பதிப்பாசிரியர் துடிசைகிழார், அ. சிதம்பரனாரவர்கள். இந்நூலாசிரியர் யாவர் என்பது தெரியவில்லையென்று பதிப்பாசிரியரவர்கள் நூன்முகத்தில் கூறுகிறார்கள். இது கிரௌன் ௧௫௰ பக்கங்கள் கொண்டதொரு புத்தகம். இதில் ௫௧௨ பாக்கள் உள்ளன. பாக்கள் அழகாக அமைந்திருக்கின்றன. நாட்டுச்சருக்கம் நன்றாக இருக்கின்றது. கொங்கு நாட்டுப் பெருமை இனிது கூறப்பெற்றிருக்கின்றது. சோலை வருணனை சுகமாக இருக்கின்றது. நைமிசச் சருக்கத்திலுள்ள இவ்விரண்டு பாக்களும் நமது நண்பரனைவரும் படித்துப் பார்க்கத் தக்கவை:—

> கொடுவ ரித்திர ளமதுபாற் கொடுத்துமான் குருளைக்
> கடுப சிப்பிணி யவித்துளங் குழைந்துதா லாட்டும்
> படுமெ தக்கயக் கன்றினை மடங்கல்பா ராட்டி
> நெடுக யப்பிளு லணைத்துடல் புளகெழ நீவும்.
>
> பருந்துங் கிள்ளையு மிருந்தொரு பஞ்சரம் பயிலும்
> வருந்துஞ் சிற்றெலிக் கராவெயிற் படங்கொடு மறைக்கும்
> திருந்துந் தண்ணருளாற் புலிப் பறழினந் தெவிட்டப்
> பொருந்தும் புண்ணிய வனத்தினம் பசுக்கள்பாற் புகட்டும்.

இப்புத்தகத்தின் இறுதியில் அப்புராண வசனமும் சேர்க்கப்பெற்றுளது. முகவுரை நூன்முக என இரு விரிவுரைகள் உள்ளன. விலை அணா ௧௨.

உருத்திராக்க விளக்கம்: விபூதி விளக்கம்:—இவ்விரண்டு புத்தகங்களும் துடிசைகிழார், அ. சிதம்பரனாரவர்களால், மிக நன்றாகப் பல நூல்களிலிருந்தும் திறம்பட நவீன முறையில் ஆராய்ச்சி செய்து எழுதப் பெற்ற நூல்களாகும். வைத்திய சாஸ்திர ரீதியாகவும், பௌதிக சாஸ்திர ரீதியாகவும் தெளிவாக உருத்திராக்கத்தின் உண்மை வலிமையும், திருநீற்றின் பெருமையும் இனிது எடுத்துக்காட்டப் பெற்றிருக்கின்றன. புத்தகத்தின் முற்பாகத்தில் நிறைந்த விபூதி ருத்திராக்ஷதாரணத்துடன் ஆசிரியர் படம் பொலிகின்றது. சைவ சமயிகளாவார் யாவரும் இவ்விரு அரிய நூல்களையும் அவசியம் வாங்கி வாசித்து உணருதல் வேண்டும். ஒவ்வொரு புத்தகமும் விலை அணா நான்கே. வேண்டுவோர் செங்கற்பட்டுச் சைவசமயாபிவிருத்தி சங்கக் காரியதரிசிக்கு எழுதிப் பெற்றுக்கொள்க.

பைந்தமிழ்:—சென்னையிலிருந்து வெளிவரும் இப்புதிய மாதப் பத்திரிகையின் முதல் இரண்டு இதழ்கள் வரப்பெற்றோம். இதன் ஆசிரியர், கே. ஜகதீசன் பி. ஏ. ஆவர். முதல் இதழில், ஸர். எம். ஸி. டி. முத்தையா செட்டியார் படமும், இரண்டாவதில், ஸ்ரீயுத சித்தரஞ்சன தாஸர் படமும் இணைக்கப்பெற்றுள்ளன. பொதுவாகப் பத்திரிகை அழகாயிருக்கின்றது. இரண்டு இதழ்களும் பல வகையான கட்டுரைகளைத் தாங்கி நிற்கின்றன. நாவல் ஒன்று தொடருகின்றது. "சிவபெருமானும் செந்தமிழும்." "செந்தமிழ் நிந்தை சிவநிந்தையே யாம்" எனும் மகுடங்களுடன், ஸ்ரீ. சதாசிவம் பிள்ளையவர்கள் பாடியுள்ள அகவற்பாக்கள் படிக்கத்தக்கன. உள் நாட்டுக்கு வருட சந்தா ரூ ௨-௮-0 வெளி நாட்டுக்கு ரூ. ௩-௧௨-0.

சோதிடகலாநிதி:—இஃதும் ஒரு புதிய மாதப்பத்திரிகை. வேலப்பாடி, இராயவேலூரினின்றும் வெளிவருவது. ஒரே ஒரு துறையை நாடி உழைக்கும் ஆங்கிலப் பத்திரிகைகளைப்போல், இது சோதிடத்துறை யொன்றையே தன்னுடைய நோக்கமாகக்கொண்டு வெளிவருவது போற்றத்தக்கது. இப்பொழுது வெளிவந்துள்ள இதன் இரண்டு இதழ்களிலும், சோதிட சம்பந்தமான பல அரிய விஷயங்கள், தமிழ் நூல்கள் பலவற்றிலுமுள்ள மேற்கோள்களுடன் எழுதப்பெற்றுள்ளன. பொதுவாக நமது நாட்டில் நடைபெறும் விசேஷ நாட்கள் காரணங்களுடன் விளக்கப்பெற்றுள்ளன. பெரும்பாலும் எல்லா வியாசங்களும் பத்திராதிபராலேயே எழுதப்பெற்றிருக்கின்றன. பத்திராதிபர், பாலசோதிடர் வ. கு. வேலுநாயகர். உள்நாட்டுக்கு வருட சந்தா ரூ. ௧—.—0. வெளிநாட்டுக்கு ரூ. ௧—௪—0.

மத்ரைஞ்சிதம்.

(குட்டிச்சாத்தன் A. B. C. D. E. F. etc., எழுதியது.)

சதுர்:—கோயில்களில் திருநடனஞ்செய்யும் தேவடியாட்களிடத்தில் அபிநயமும் ஆட்டபாட்டமும் சரியாக இருக்கவேண்டுமானால், நிறைய நய மான அபினியும் கள்ளையும் வாங்கிக்கொடுத்து விட்டால் ஷோக்காக இருக் கும் என்று ஒரு அன்பர் அபிப்பிராயப்படுகிறார். இனித் திருவிழாக்கள் ஆரம்பிக்கும் காலமாதலால் இது மிக நல்ல யோசனை தான்.

தோசை:—தோசை ஒரு நல்ல பலகாரம். இதன் பெயர்க்காரணம் ஆராயத்தக்கது. துவா, ஓசை—தோசை. ஒரு முறை தோசைக் கல்லில் வார்த்துவிட்டு, மறுமுறை திருப்பிப்போடுவதாலும், இருமுறையிலும் ஓசை உண்டாவதாலும் தோசை என்று வந்ததெனத் தெரிகிறது இட்டலியின் பெயர்க்காரணமும் ஆராயத்தக்கது தான்.

சுவாமிபார்த்தல்:—திருவிழாக்களில் ஏன் பக்தி குறைந்து போய் விட்டது என்று என்னை ஒரு நண்பர் கேட்கிறார். இப்பொழுது திருவிழாக் களுக்குவரும் ஜனங்கள், கண்காட்சியாகச் சுவாமியைப்பார்க்க வருகிறார்களே யொழியச் சுவாமி கும்பிடுதற்குவரவில்லை. எவ்வளவு நகைகள் சாத்தப் பெற்றிருக்கின்றன? என்னவாகனம்? வெள்ளியா? தங்கமா? சின்னமேளம் யார்? நாகசுரம் யார்? எவ்வளவு ரூபாய்க்கு வாணம்?'' என்பதைப்பற்றிப் பெரிதும் கவலையாக இருக்கிறபடியாற்றான் பக்தி கிராக்கியாகயிருக்கிறது.

அதிசயமானமுட்டை:—விருதுபட்டியில் ஒரு நாட்டுக்கோழி முட்டை யிட்டிருக்கிறதாம். அதன் உச்சியில் சங்கு சக்கரமும், ஒரு பக்கத்தில் "பூர் வீகம்'' என்ற அரபி எழுத்தும் மறு பக்கத்தில், "பிஸ்மில்லா இர்ரஹிமாம் நிர்ரகிம்'' என்ற எழுத்தும் இருக்கின்றனவாம். அது ஹிந்து முஸ்லீம் ஒற் றுமையைக் காட்டுகிறதாம். அது பத்திரமாக வைக்கப்பெற்று எல்லோரா லும் பார்க்கப்படுகிறதாம். அது குஞ்சுபொரித்தால் எப்படியிருக்குமோ? பொறுமையும் ஜீவகாருண்யமுமில்லையே!

மீதாலும்:—சிலர் பிதுர் தேவதைகட்கும் சிறு தெய்வங்கட்கும் ஆட்டுக் குட்டி வெட்டி, அதன் கறியை அறுத்து அவித்து வைத்துப் படைக்கிறார் கள். அந்த திவ்ய பிரசாதத்தில் மீதியையும், அவ்வாட்டுக்குட்டியின் தோலை யும் வெளியில் ஒருவருக்கும் கொடுக்கக்கூடாதென்று, குழியைவெட்டி மண் ணைப்போட்டு மூடிச் சேமம்சேர்க்கிறார்கள். செட்டாக உள்ள சிலர் இரண்டு மூன்று தினங்களுக்குப் படைப்பை வளர்த்துச் சேமஞ்சேர்க்காது முழுவதை யும் ஒருகை பார்க்கிறார்கள். இவர்களினும் கெட்டிக்காரர்கள் அவ்வாட்டுக் குட்டியின்தோலைப் பொசுக்கி, அதன்மேல் சாம்பலைத் தூவி உரோமங்களை நன்றாக வழித்துவிட்டுத் துண்டு துண்டாக நறுக்கிக் குழம்புவைத்துக்

குடிக்கிறார்கள். இதற்குமேல் எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. உரோமத்தையும் பொசுக்கி, உப்புப் புளி மிளகாய் வைத்து அரைத்து ஒருசட்னியாக உபயோகப் படுத்தலாம். கொம்பு, குளம்பு முதலியவைகளும் இன்னும் நன்றாக ஆராய்ந்து பார்த்தால் எதற்காவது ஒரு சமிக்கு உபயோகப்படும்.

புது வருஷம்.

நமது குமாரனுக்கு இரண்டாவது வருஷம் வருகிற சித்திரை மாதம் ஆரம்பமாகிறது. அது முதல் வருஷ சந்தா உள்நாட்டுக்கு ரூ. ௧-0-0 வெளிநாடுகளுக்கு ரூ. ௧-௮-0 ஆகும். சந்தா அதிகப்படுவது போல பிற விஷயங்களும் பன்மடங்கு அதிகப்படும். பத்திரிகையில் ஆர்வங் கொண்டுள்ள அறிஞர் பலர் குமரனைத் தமிழ் நாட்டில் ஒரு பெரும் பத்திரிகை யாக்கிவிட வேண்டுமென்று அடிக்கடி அறிவுறுத்துவதால் அந்த வழிபற்றிக் "குமரன்" செல்கின்றான். சமய சம்பந்தமான விஷயங்கள், நூலாராய்ச்சி, சரித்திரம், இயற்கையற்புதங்கள் பூகோளம் முதலியவற்றைப் பற்றிய விஷயங்களும் வாழ்க்கையின்பத்தைப் பற்றிய கதைகளும் விகடக் குறிப்புகளும் சிறந்த மொழிபெயர்ப்புக்களும், அரியகுறிப்புரைகளும், சமாசாரங்களும், இன்பமான பாக்களும் வெளிவரும். அடிக்கடி அழகான சித்திரப்படங்களும் வெளியிட விரும்புகின்றோம். ஆங்கிலங்கற்ற தமிழர்கட்கும் தனித் தமிழ்ப்பண்டிதர்கட்கும், பள்ளியிற்படிக்கும் இளைஞர்கட்கும், சொற்பப்படிப்புள்ளவருக்கும், மாதர்கட்கும் பயன்படுமாறு விஷயங்களைத் திரட்டிக் கொடுப்பதற்குப் பக்கங்களை அதிகப்படுத்தாமல் முடியவில்லையாதலால் பக்கங்களை அதிகப்படுத்த எண்ணினோம். தமிழ்நாட்டில் புதிய துறையில் வேலை செய்வதென்றால் பலமடங்கு செலவு செய்யவேண்டிநேரிடுகிறது. இவைகளைக் கருதியே சந்தாவைச் சிறிது உயர்த்தவேண்டியதவசியமாயிற்று. அன்பர்கள் ஒவ்வொருவரும் பணத்தைச்செலுத்திக் குமரனை ஆதரித்துவர வேண்டுகின்றோம். முன்னர் கூட்டியே பணத்தை அனுப்புவார்களானால் செலவு மிச்சப்படும். இன்றேல் சித்திரை சஞ்சிகை வி. பி. மூலம் அனுப்பப்பெறும். வீணாகச்செலவு நஷ்டமாவதை நேயர்கள் கவனித்திடுக. புது வருஷப்பத்திரிகை தேவையில்லையாயின் முன்னரே தெரிவிக்கவேண்டுகிறோம். இல்லையானால் அனாவசியமாக வி. பி. செய்யப்பட்டுப் பணம் நஷ்டமாகிறது. வெளிநாடுகளில் பினாங்கு சிங்கப்பூர் மலாக்காமுதலிய சில ஊர்கள்தவிர பாக்கி ஊர்கட்கு வி. பி. முறையில்லாதபடியால் அவ்வூரிலுள்ள நமது நேயர்கள் தயவுசெய்து கட்டாயம் முன் பணம் அனுப்பவேண்டும். இல்லாவிட்டால் வி. பி. முறையில்லாத ஊர்கட்கு பங்குனி மாதத்தோடு பத்திரிகை நிறுத்தப்படும்.

மானேஜர், "குமரன்"

காரைக்குடி.

காரைக்குடி தனவைசிய ஊழியன் அச்சியந்திரசாலையில் அச்சிடப்பெற்று
சொ. முருகப்ப செட்டியாரால் பிரசுரஞ் செய்யப்பட்டது.